தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை 6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஆனி 26 (9-7-'60). சனிக்கிழமை | இதழ் 4

இந்தியத் துணைக் கண்டமெங்கும் இந்திக்கு எதிர்ப்பு! "அழியட்டும் இந்திப் பகை!" என்ற போர்முழக்கம்! இதை விளக்கும் கட்டுரையை 4-ம் பக்கம் காண்க!

வெடித்தது எரிமலை!

புதிய உலகம் நம் கண்களுக்குத் தெரிகிறது. பொருள் நிறைந்த எதிர்காலம் நம்மை அழைக்கிறது. 'இந்த மனிதர்கள் கோழைகள்!' என்ற இழி சொல்லிலேயிருந்து நாம் தப்பித்துக்கொள்ளப் போகிறோம். சுயநலமும் அழுக்காறும் நிறைந்த உள்ளங்கள், தங்கள் இலாபவேட்டைக் கூடாரத்திலேயிருந்து நம்மை எதிர்க்கப்போகின்றன.

இவையிவை நடக்குமென நமக்குத் தெரியும். தெரிந்தே புறப்பட்டுவிட்டோம். இந்த முயற்சியை, நமது இறுதி முயற்சியாகக் கருதவும் நாம் தீர்மானித்துவிட்டோம். அடிமைப்பட்டுக்கிடப்பவர்கள் நிமிர்ந்து உட்காருவோம். பிணைக்கப்பட்டிருக்கும் விலங்குகளைப் பலமான ஒலியோடு உடைத்தெறிவோம். குழி விழுந்த கண்களிலே ஒளி மிதக்கும். குனிந்திருந்த தலை, இனி நிமிர்ந்து நிற்கும். ஒன்று ஒளியைக் காட்டும் விடுதலை உலகம்; இல்லையேல், இருளில் ஆழ்த்தும் மரணபூமி.

அடிமைப்பட்டிருப்பவர்கள் தாங்கள் அடிமைகள் என்பதை உணராவிட்டால், மனிதர்கள் என்கிற இடத்திலிருந்தும் தள்ளப்படுவார்கள்! அவர்கள் தங்கள் வருங்காலச் சந்ததிகளை மிருகங்களாகவே படைத்துவிட்டவர்கள் ஆவார்கள். நமது தலைமுறை அந்தப் பாபத்திற்கு ஆளாக வேண்டாம்.

தன்னிச்சையாகப் பூத்துக்குலுங்கும் மலர்க்கொடிகளைப் போன்று, நாமும் பூத்துக் குலுங்குவோம்.

நம்மிடம் வரி வாங்கவும் நம்மை அடக்கி ஆளவும், "இனி யாருக்கும் அதிகாரமில்லை!" என்பதை எச்சரிக்கையாகச் சொல்லுவோம்.

"எங்கள் தாய் எங்களுக்குச் சொல்லிக்கொடுத்த மொழியை எந்த நாய் வந்து மாற்றிவிடும்?" என்று கேட்போம்.

அரியாசனத்து அரசரோடு சரியாசனம் இருந்த நம் தாயை, எந்த ஆதிக்கம் சாய்த்துவிடுமென்பதைப் பார்த்துவிடுவோம்!

அகர முதல எழுத்துக்களை நாம் அடியோடு மறந்துவிடுமாறு பணிப்பவர்கள், யாராயினும் அவர்களை வீழ்த்துவோம்!

பன்னெடுங் காலமாய்ப் பண்பிருந்த எங்கள் குலம், தன்னரும் பெருமைகளைச் சாய்த்துவிட ஒப்பாது!

மின்னல் கிளம்பி விரிவானை முத்தமிடும் கண்ணிமைக்கும் நேரத்தில் களத்தில் இறங்கிடுவோம்!

பண்ணெங்கள் பண்ணென்றும், பாட்டெங்கள் பாட்டென்றும், மண்ணெங்கள் மண்ணென்றும், மனையெங்கள் மனையென்றும், எண்ணங்கள் எங்கள் இதயத்தின் ஊற்றென்றும், வன்னெஞ்சர் தம் வாள்முனைக்குக் கூறிடுவோம்!

தோல் தடித்துவிட்டால் சூடு தெரியாது;

இதயம் தடித்துவிட்டால் எண்ணம் கலங்காது!

ஒன்றே உணர்ச்சி!

அது ஒப்பரிய தாயகத்தின் விடுதலைக்குப் போராட்டம்!

மண்ணில் குவிந்துவிட்ட மறவர் படைவரிசை நம்மை அழைக்கிறது; நாமும் புறப்படுவோம்!

புகழெனில் உயிரும் கொடுப்போம்!

பழிஎனில் உலகையும் ஏலோம்!

அயர்விலம்; அஞ்சலம்; துஞ்சலும் இலம்!

எனினும் அஞ்சுவதஞ்சி, வஞ்சகர் மொழியை மண்ணிடை வீழ்த்துவோம்!

பஞ்சினிற் படர்ந்த பொறி எனப் படர்வோம்!

பாழ்படும் நாட்டின் வீழ்வினைத் தடுப்போம்!

ஆழ்கடல் முழக்கம் அடங்குவதில்லை;

அலைகள் இதுவரை ஓய்ந்ததுமில்லை;

"வாழிய தமிழர்! வாழிய!" என்னும் மறவர் முழக்கம் மறைவதுமில்லை!

இத்துணை நாளும் நமக்கென அன்னை இட்ட பணியை மறந்தே கிடந்தோம்!
கொத்துப்பூவெனக் குவிந்த தோழர்கள் சக்தியை, இதுவரை மறைத்தே வந்தோம்!

காலம் வந்தது; கட்டளை வந்தது!

"வீரர் வரு"கென விண்ணொலி கேட்டது!

புன்மைகள் இல்லாப் போர்முறை தம்மைத் தன்னிகரில்லாத் தலைவர்கள் தந்தனர்.

"சென்றனர்; வென்றனர்!" என்றிவ்வுலகம் செப்பும்வரை நாம் போர்க்களம் காண்போம்!

வாழிய தமிழர்!

வாழிய திராவிடர்!

கண்ணதாசன்

நாவலர் வேண்டுகோள்!

திராவிடப் பெருங்குடி மக்களுக்கு வளமற்ற இந்திமொழி தேவைப்படவில்லை என்றும், தங்கள் தங்கள் மாநில ஆட்சிக்குத் தாய்மொழியும், திராவிடக் கூட்டாட்சிக்கு நான்கு திராவிட மொழிகளும், பிறவகையில் ஏற்படும் அகில உலகத் தொடர்புக்கு ஆங்கில மொழியும் போதுமானவைகளாக இருக்கின்றனவென்றும் திராவிட முன்னேற்றக் கழகம் பல்லாண்டு காலமாக வற்புறுத்தி வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமின்றித் தென்னக அறிஞர் பெருமக்கள் பலரும் மேற்கண்ட கருத்தையே மீண்டும் மீண்டும் பல காலமாக வற்புறுத்தி வந்திருக்கின்றனர்.

என்றாலும், தென்னக மக்களின் இந்தச் சீரிய எண்ணத்தை மதிக்காமலும், விருப்பத்தை அறிய முயலாமலும், உரிமை வேட்கையைப் புறக்கணித்தும் தேவையற்ற இந்தியைத் திராவிடத்தின்மீது வலுக்கட்டாயமாகத் திணித்தே தீருவது என்று, வடநாட்டு இந்தி ஏகாதிபத்திய ஆட்சி முடிவு செய்துவிட்டது. அதனை முழு மூச்சோடு எதிர்த்தே தீர்வது என்று திராவிட முன்னேற்றக் கழகம், அறப்போராட்டக் கொடியை உயர்த்தி இருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் ஒரே மொழிதான் தேசிய மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இருக்க வேண்டும்; அந்த மொழி இந்தியாகத்தான் இருக்க வேண்டும்; இந்தியாக மட்டுமேதான் இருக்க வேண்டும்-என்ற முறையில் இந்தி மொழி வெறியர்கள் இப்போது கொக்கரித்துக் கிளம்பியிருக்கின்றனர். இந்தி மொழியின் இந்தப் படையெடுப்பு, திராவிட மொழிப்பற்றை அழிக்கும்; மொழிப்பற்றை அழித்து, திராவிட இனப்பற்றை அகற்றும்; இனப்பற்றை அகற்றி, திராவிட நாட்டுப்பற்றை நீக்கும்; நாட்டுப்பற்றை நீக்கி, திராவிட நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அடியோடு போக்கும்; வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்குத் திராவிடத்தை என்றென்றும் அடிமையாக்கும்-என்று, திராவிட முன்னேற்றக் கழகம் பல்லாண்டு காலமாகச் சொல்லி வந்திருப்பதோடு, இந்தி வலுக்கட்டாயமாகப் புகுத்தப்படும் ஒவ்வொரு கட்டத்திலும் தன்னுடைய எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டி, அடக்குமுறைகளைத் தாங்கித் தொல்லை துயரங்களை ஏற்றுப் போராடியும் வந்திருக்கிறது.

தற்போது அந்த இந்தி, ஆணவ அதிகாரத்தின் துணைகொண்டு, புது முறுக்கோடும் திட்டமான முடிவோடும் ஆதிக்கஞ் செலுத்தப் புறப்பட்டு இருக்கிறது. அதனைத் தென்னக மக்களின் சார்பாக, அதே விதமான புது முறுக்கோடும் திட்டவட்டமான முடிவோடும் எதிர்த்துத் தீர வேண்டிய கட்டத்திற்கு தி. மு. கழகம் வந்து சேர்ந்திருக்கிறது.

இதன் காரணமாகத்தான் தி. மு. கழகம், 19-6-60-ல் குமாரபாளையம் பொதுக்குழுவில் இந்தி எதிர்ப்பு அறப்போராட்டக் கொடியை உயர்த்தி, அறப்போராட்டச் செயல்களை முறைப்படி மேற்கொள்ள முனைந்திருக்கிறது.

தென்னக மக்களின் சார்பாக, கழகம் துவங்கியிருக்கும் இந்தச் சீரிய பணிக்கு, நல்ஆதரவும் நல்ஒத்துழைப்பும் நல்கப் பல்துறை அறிஞர் பெருமக்களும், மொழி அன்பர்களும், நாட்டு விடுதலை வீரர்களும், தொழிலாளிப் பாட்டாளி மக்களும், பெருந் திரளினராக முன்வரும் காட்சியும் மாட்சியும் மட்டற்ற மகிழ்ச்சி அளிப்பனவாகும்.

மொழிகாக்கும்-நாடுகாக்கும் அறப்போராட்டம் மிகச் சீரிய முறையில் வெற்றிபெற, திராவிடப் பெருங்குடி மக்களின் உள்ளவலிவும், உரைபொலிவும், உடல் உழைப்பும், பொருள் உதவியும் மிகப் பெரும் அளவுக்கு வேண்டப்படுவனவாகும்.

இந்த நிலைமைகளை அறிந்து, இயன்ற உதவிகளை எல்லாம் செய்ய முன்வருமாறு பொதுமக்களையும், கழக ஆதரவாளர்களையும், கழகத் தோழர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும், பொதுக்கூட்டங்கள் மூலமாகவும், நிதி நிகழ்ச்சிகள் வாயிலாகவும், அமைப்புகளிடத்திலும் தனிப்பட்டோரிடத்திலும் நிதி திரட்டுவதன் மூலமும், பொருள் திரட்டி அதனை அவ்வப்போது தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

நிதி திரட்டும் கடமையாற்ற இன்றே புறப்படுமாறும், இனிதே திரட்டுமாறும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

அறிவகம், சென்னை-13.
5—7—1960,

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர் தி. மு. க.

குறிப்பு:—நிதி அனுப்ப வேண்டிய முகவரி:—

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்', சென்னை-13.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 9-7-'60 | இதழ் 4

கடையாணிகளின் கவலே

பண்டிதரின்கீழ் வேலே பார்க்கும் 20 இலட்சத்துக்கும் அதிகமான தில்லி ஊழியர்கள் தம் கோரிக்கைகளேப் பலமுறை அவரின் காலடியில் வைத்தனர். வழக்கம்போலவே திமிராயிருந்தார். இப்போது, அவர் முகத்தில் வேலே நிறுத்த அறிவிப்பை வீசி எறிந்திருக்கின்றனர். 11-7-60 அன்று நள்ளிரவு அவர்கள் வேலே நிறுத்தத்தைத் தொடங்குகின்றனர்.

தில்லி அரசின் ஊழியர்கள் தெளிவாகத் தம் கோரிக்கைகளேத் தெரிவித்திருக்கின்றனர். இரண்டாவது சம்பளக் குழுவின் தீர்ப்பை, பண்டிதரின் அரசு அப்படியே ஏற்றுக்கொண்டதாம். ஆனுல் அத்தீர்ப்பிலும் சில பல குறைகள் இருப்பதைக் கண்டு தொழிலாளர்கள், மறு முறையும் தங்கள் நிலேயை ஆயச் சொல்கின்றனர். அஞ்சல் மற்றும் தந்தித் துறை ஊழியர் பேரவையின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டதுபோல, பெரும்பான்மையான தொழிலாளரின் உள்ளத்தைச் சம்பளக் குழுவின் தீர்ப்பு மனநிறைவு கொள்ளச் செய்யவில்லே. இந்த நிலேயில் அவர்கள் மறு விசாரணே கோருவது சரியே. வங்கி ஊழியர்கள் பற்றி அளிக்கப்பட்ட பிறிதொரு தீர்ப்பு, வங்கிக்காரர்களின் நலனுக்காகப் பல முறை மறு விசாரணேக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அஞ்சல் மற்றும் தந்தித் துறை ஊழியர்கள் இடைவிடாது பல முறை போராடியதன் பயனுகவே 1957-ல் இரண்டாவது சம்பளக் குழு அமைக்கப்பட்டது; அறிவோம். இரண்டாண்டுகள் அக்குழு ஆராய்ந்தது நிலேமைகளே. கடந்த நவம்பரில் கடைசியாகத் தன் முடிவுகளேச் சொல்லியது. அந்த அறிக்கை வெளியானதும் அனேவரும் கண்டித்தனர். தோழர் டாங்கே பாராளும் மன்றத்திலும் கண்டித்தார். ஆனுல் காங்கிரசைச் சார்ந்துள்ள ஐ. என். டி. யு. சி. மட்டும் கண்டித்திடவில்லே. "தொழிலாளர்க்கும் அரசினர்க்கும் நடு நிலேயான அறிக்கை இதுவே!" என்று கூறி உண்மையை மறைத்தது.

அவ்வறிக்கை அடிப்படைச் சம்பளத்தை ரு 75 ஆக நிர்ணயித்தது. 15-வது இந்தியத் தொழிலாளர் மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட நியாயங்களுக்கும் இத்தொகை தாழ்ந்தது எனகின்றனர், தொழிலாளர்.

சராசரி உணவு, உடை, உறையுள் தேவைகளே வைத்துக் கணக்கிட்டாலும் நான்கு பேர்கொண்ட ஒரு குடும்பத்திற்குத் தற்போதைய விலே வாசிகளின்படி அடிப்படைச் சம்பளம் ரு 125 ஆக வேண்டப்படுகிறது. குழுவின் தீர்ப்பான ரு 75 பற்றவே பற்ருது. "ரு 125 கேட்பது இந்திய மக்களின் சராசரி வருமானத்திற்கும் மேற்பட்ட தொகை!" என்று கூறித் தட்டிக் கழிக்கப் பார்க்கின்றனர். சராசரி வருமானமும் உயர்த்தப்பட வேண்டும்; தில்லி ஊழியர்களின் நலனும் பேணப்பட வேண்டும்; இவற்றைச் செய்து முடிப்பதே, செய்யத் துடிப்பதே நல்லரசின் இலக்கணமாகும்.

அடுத்து இரண்டாவது சம்பளக் குழு பஞ்சப்படியிலும் கை வைத்திருக்கிறது. பஞ்சப்படி என்பது விலே வாசு ஏற்ற இறக்கத்தைப் பொறுத்து வேண்டப்படுவது. முன்னிருந்த நிலேயைவிட வாழ்க்கைப் புள்ளி இருபது உயர்ந்தும், சம்பளக் குழுவினர் ஐதர் காலத்துக் கணக்கையே போட்டிருக்கின்றனர். 150 ருபாய்வரை சம்பளம் பெறுவோர்க்கு ரு 10-ம், 150 முதல் 300 ருபாய் வரை சம்பளம் வாங்குவோர்க்கு ரு 20-ம் பஞ்சப்படி என வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் தவறே. சம்பள அளவைக் கொண்டு பஞ்சப்படியைக் கணிப்பது தவறு; விலே வாசிகளே வைத்தே கணிக்க வேண்டும். இப்போது தரப்படும் குறைந்த சம்பளத்திலும் கட்டாய "பிராவிடெண்ட் பண்டு"க்கும், 'கிராசுவிட்டி'க்கும் வேறு பெருந்தொகையைப் பிடித்துக்கொள்கின்றனர். அதனுல் ஊழியர்கள் தம் சம்பளத்தொகையில் வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதோ சிறிய தொகை தான்.

முதற் சம்பளக் குழுவான வரதாச்சாரி குழு தந்த தீர்ப்பைக்கூட இப்போது அரசினர் மதிக்க மறுக்கிருர்கள். பஞ்சாலேத் தொழிலாளர்கட்கும், வங்கி ஊழியர்கட்கும் தரப்பட்டிருக்கின்ற சாதாரணச்சலுகைகள்கூட தில்லி ஊழியர்கட்கு மறுக்கப்பட்டிருக்கின்றன.

எனவேதான் தில்லி ஊழியர்கள் தமது பல சங்கங்களேயும் இணேத்த நடவடிக்கைக் கூட்டுக்குழு ஒன்றமைத்துச் செயலில் ஈடுபட்டிருக்கின்றனர்; போர்க்கொடி உயர்த்தியிருக்கின்றனர்! ஊழியர்களின் போர் முரசம் பண்டிதர் செவியைக் கிழிக்கிறது. பண்டிதர்நிதானமிழந்து, "பார்த்தாயா, என் படையை? வீணே உயிரை இழக்காதே!" என்று மிரட்டுகிருர். இந்நடவடிக்கைக் கூட்டுக்குழு தற்காப்புத்துறை, புகைவண்டிப் போக்குவரத்துத்துறை, மத்திய அரசாங்க அலுவலகம் அஞ்சல்துறை ஆகியவற்றின் ஊழியர்களேக் கொண்டதாகும். இந்த ஊழியர்களின் எண்ணிக்கை 1957 சூன் 30-ம் நாளேயக் கணக்குப்படி 17 இலட்சத்து 73 ஆயிரம் ஆகும். இந்த மூன்ருண்டுகளில் அது ஏறத்தாழ 20 இலட்சமாகக் கூடியிருக்கிறது. இதில் அரைப் பகுதிக்குமேற்பட்ட ஊழியர்கள் (1957-ம் ஆண்டுக் கணக்குப்படி 9, 97, 266 பேர்) புகைவண்டிப் போக்குவரத்து ஊழியர்கள். நாட்டின் வணிகம் முழுவதும் இவர்கள் ஒத்துழைப்பில் தான் இருக்கிறது. 19 அமைச்சுகள் தில்லியரசில் இருக்கின்றன. இவற்றில் 15 அமைச்சுகளில் பணிபுரியும் ஊழியர்களில் பெரும் பகுதியினர் தற்காலிக நியமனம் பெற்ருரே! குறைந்த கூலி பெறுவதோடு வேலே நிச்சயமற்ற வேதனே வேறு இவர்களுக்கு!

ஒவ்வொரு அமைச்சும் தன் ஊழியர்களுக்குத் தந்த சம்பளச் செலவுகள் இதோ: புகைவண்டித்துறை அமைச்சு 161 கோடியே 62 இலட்சம் தருகிறது. அஞ்சல் மற்றும் தந்தித்துறை ஊழியர்கள், 35 கோடியே 99 இலட்சம் தரப்படுகின்றனர். தற்காப்புத்துறை அமைச்சின் ஊழியர்கள் 39 கோடியே 54 இலட்சம் ருபாய்களேப் பெறுகின்றனர். மற்ற துறைகளின் ஊழியர்கள் ரு 66 கோடியே 71 இலட்சம் பெறுகிருர்கள். இவற்ருல் இந்திய அரசே, இந்தியத் துணேக்கண்டத்தில் மிகப் பெரிய முதலாளி'என்பது சொல்லாமல் விளங்கும். இந்தக் கொடிய முதலாளித்துவம்தான் இப்போது தொழிலாளர்களே வம்புக்கழைத்திருக்கிறது

தங்களது கோரிக்கைகளேப்பற்றி இவர்கள் எடுத்துரைக்கச் சென்றபோது பிரதமர் நேரு பேட்டி தரவும் மறுத்திருக்கிருர். உலகத்துச் சிக்கல்களெல்லாம் பண்டிதரின் கண்களில் படுகின்றன. ஆனுல் இந்த ஏழையரின் தொல்லேகள் மட்டும் பண்டிதரின் கண்ணில் படவில்லேயே ஏன்? ஏன்?

விலே வாசிகளின் உயர்வுக்கு ஏற்ருற்போல, சம்பளத்தையும் பஞ்சப்படியையும் உயர்த்தாததேன்? ஏற்கனவே இருந்த விடுமுறை வசதிகளும் வேலே நேர ஒழுங்குகளும் மாற்றப்பட்டிருக்கின்றன. ஊழியர்களின் மூளேயைச் சாதாரண இயந்திரங்களாக மாற்றிவிட்டனர். அதிக வேலே வாங்கத் தெரிந்தவர்களுக்கு அதிக ஊதியம் தரத் தெரியாததேன்? பழைய காலத்தை நினேத்துக்கொண்டு பேசுகின்ருர் பண்டிதர்; பழைய சர்வாதிகாரிகளின் முறையில் செல்கிருர் பண்டிதர். ஆனுல் விலேகள் மட்டும் பழைய நிலேயில் இல்லே. இல்லே. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பத்தணுவுக்குக் கிடைத்த அரிசி, இரண்டாவது திட்டம் முடியும் இந்நாட்களில் ரு 1-25-க்குத்தான் கிடைக்கிறது.

வரவிருக்கின்ற 11-ம் நாள் நள்ளிரவு இத்தனே பிரச்னேகளுக்கும் முடிவு தெரிந்தாக வேண்டும்! கடையாணியைப் பகைத்துக்கொண்டு தேரை ஓட்ட நினேக்கின்ருர் பண்டிதர். இவர் முன்னே, போராட்டம் ஒன்றுதான் தில்லியரசின் ஊழியர்களுக்குக் கண்ணீர் துடைக்கும் கருவி என்ருல், அதுவே இறுதி ஆயுதமாக அமையட்டும்! "போராட்டத்தை நசுக்கியே தீருவோம்!' என்று நேரு இனியும் நினேத்துவிட்டால் அவர் ஆட்சி வீழ்ந்து மாயட்டும்; வேரோடு சாயட்டும்! ★

முழக்கங்கள்!

1. எழுந்தது பாடிவீடு!
இந்தியேநீ திரும்பிஓடு!

—செயபத்மன், வீடூர்.

2. சோற்றுப் பிண்டங்கள் யாமல்லடி—இந்தி
சொல்லாமல் ஓடுது பாருங்கடி!

—அ இரத்தினசாமி, கோவிலூர்.

3. இந்தியெனும் நச்சாவு
இங்குபுகின் சச்சரவே!

—கு. செந்தமிழ்ச் செல்வன், சென்னே-12.

4. மந்திக்கு ஏன் மணிமகுடம்!—மாண்பில்லா
இந்திக்கு ஏன் ஆட்சிபீடம்?

5. வேழத்தின் காட்டில் வேட்டைநாய்க்கு விருந்துமில்லே!
வீரத்திரு நாட்டில் இந்திக்குப் பந்தியுமில்லே!

—இளந்திரையன், சம்மணப்பட்டி.

6. மத்திய அரசுக்குத் திராவிடம் எதிரி!
மானங்கெட்ட இந்திக்குத் தமிழினம் வைரி!

—வி. தா. சந்திரசேகரன், சென்னே-7.

7. மைந்தரெல்லாந் திரண்டுவிட்டார் "எடுவாள்!வா"ளென
மயங்கிஅந்தோ ஓடுகிருள் இந்தி தூள்!தூளென!

—அ. டி. மதியாளன், சென்னே-7.

8. அண்ணுவின் பாசறையில் போர்முழக்கம்!
அந்நியனின் இந்திக்குச் சவஅடக்கம்!

—அர. தமிழன்பன், விருத்தாசலம்'

9. தேன்சொட்டும் தமிழிருக்க—நமக்குத்
தேள்கொட்டும் வலி எதற்கு?

—பெ. மணிமாறன், மணமேடு.

10. அன்னே மண்ணும் அந்நியன் கையில்!
தாயின்மொழியும் இந்தித் தீயில்!
ஆய கலேகளும் மாயும் நிலேயில்!
இனியும் நீர் இருப்பது வாழவோ? மாயவோ?

—இரா. கேசவன், பாரைப்பட்டி.

ஏகஇந்தியா பகற்கனவே!

“கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய ஆடை நெய்திருக்கிறேன்! காவலரே! நீங்கள் அதைக் கட்டிக் கொண்டு பவனி வந்தால் ஊரே வியக்கும், மயங்கும்! நான் தயாரித்திருக்கும் ஆடையைப்போல் யாரும் இதுவரை கண்டதில்லை! இந்த ஆடை மானத்தை மறைப்பதோடு மட்டும் நின்றுவிடாது. உங்கள் உடலில் உள்ள பிணிகளை எல்லாம் ஓட்டும்; உங்கள் தொல்லை எல்லாம் அகலும்; துன்பமெல்லாம் குலையும்! ஆமாம்! நான் கண்டுபிடித்துள்ள ஆடைக்குமுன் காஞ்சிபுரம் சேலையென்ன, சேலம் வேட்டியென்ன, எல்லாம் தோற்றுவிடும். காசிப் பட்டும் கராச்சி சரிகைத்துகிலும் தோற்றோடும்! பெருமை மிக்க இந்த ஆடையை நீங்கள் பெற்றுவிட்டால், பெருவாழ்வு உங்கள் பக்கமே!”

இனிக்க இனிக்க இப்படியெல்லாம் பேசினானும் எத்தன் ஒருவன். “ஏமாறுதீர் மன்னவரே!” என்றனர் நல்லறிவாளர். மன்னனோ அவர்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டுத் துடுக்கு மொழி பேசினானும். பின்னர் அந்த வஞ்சகன் வெறுங்கையால் முழம் போட்டுத் தந்த துணியை உடுத்திப் பவனி வந்து அவமானப் பட்டானும்!

“காற்றிலே கட்டியிருக்கிறேன் கோட்டை! அத்தனையும் பளிங்குக் கற்கள்! ‘ஆகாயத்தில் மிதக்கும் அழகு அன்னம்!’ என்று எங்கள் அரசவைப் புலவன் வருணித்தான். அதிலிருந்து பார்த்தால் தென்றல் பிறக்கும் பொதியையும், தேன் மணக்கும் கேரளத்தையும், தித்திக்கும் தமிழகத்தையும் காணலாம்; கண்டு மகிழலாம்! விழிவிருந்து விநாடிக்கு விநாடி காணலாம்! விலாவைக் குத்தும் வேல்விழி மாதரோடு பேசிப் பாடி ஆடலாம்! அந்த வான மாளிகைக்கு வந்தருளுங்கள்! மன்னவரே வந்தருளுங்கள!” என்றழைத்தானும் ஒரு சூதுமதியினன். மன்னனும் நம்பிச் சென்று, படாதது பட்டானும். தடுத்தவர்களையெல்லாம் தட்டிக்கழித்து விட்டோடியதன் பலனை இறுதியில்தான் அறிந்தானும்.

இந்தக் கதைகளில் வந்த மன்னவர்களைப் போன்றே நம் தென்னக மக்களும் ஏமாந்தனர். போய்ப் படாதது பட்டு இப்போதுதான் உண்மையை உணர்ந்திருகக்கின்றனர்! ஆகாயக்கோட்டை என்றும் அழகான ஆடை என்றும் பொல்லாத மொழி சிந்தியோரின் பரம்பரையினரே காந்தியாரும் அவர் தம் சீடர்களும் என்றோம்.

“வாழும் வீட்டைக் கலைக்க எண்ணுகின்றான் வன்கணாளன்! ஒன்றுபட்ட குடும்பத்தைக் கொன்று போட்டுவிடத் துடிக்கிறான், வஞ்சகன். இவனை நம்பாதீர்கள்!” எனறனர், கழகத்தவரைக் கண்டபோதெல்லாம்.

நம்ப மறுத்தவர்கள் - உணரத் தவறியவர்கள் இன்று விழி பிதுங்கிச் சாகின்றனர். ஆகாயக்கோட்டைக்கென்று அழைத்துச் சென்று, படுகுழியில் தள்ளும பண்டிதரின் நெஞ்சத்தை இன்றுதான் உணர்ந்து கண்ணீர் வடிக்கிறார்கள். ஆம்! தென்னக மக்கள் மட்டும் தவறவில்லை. காசுமீர மைனரின் அணைப்பை அன்று ஏற்றுக்கொண்ட பிற மாநிலத்தவர்களும் இன்று அலறித் துடிக்கின்றனா. தங்களுக்கென மங்கா வரலாற்றை வடித்துக் கொண்ட வங்காளச் சிங்கங்களும் இன்று அலறியிருக்கின்றன.

★

குடியரசுத் தலைவர் ஆணை கண்டு கொதித்தெழுந்து அறிக்கை ஒன்று விடுத்திருக்கின்றனர் வங்கக் கல்விமான்கள். அவர்கள் தாம் சார்ந்திருக்கும் இந்திய தேசிய மொழிகளுக்கான முன்னேற்ற மன்றத்தின் சார்பில், இந்திய ஆட்சி மொழிபற்றிய இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுவிட்டிருக்கின்றனர். கையெழுத்திட்டவர்களின் பெயர்கள இதோ: டாக்டர் நரேச சென்குப்தா, நரேந்திரதேவ், திரிகுணாசென், சுதீந்திரநாத் தத்தா, இராதாராணிதேவி, பேராசிரியர் நிர்மல் பட்டாச்சார்யா, எம். எல். சி., காசி அப்துல்வதுத், முதல்வர் (பிரின்சிபால்) ககேந்திர நாத்சென், அபுசையத் அயூப், டாக்டர் சுதீந்திரநாத் போசு எம். பி., விவேகானந்த முகர்சி, மைத்ரேயி தேவி, புரோத்திவா போசு, சாகர் மாய்கோசு, அமலன் தத்தா, கே. கே. சின்கா, இரன்குமார் சன்யால்.

அவர்கள் தந்திருக்கும் அறிக்கையின் சாரம் இதோ:“ இந்திய ஆட்சி மொழிபற்றிக் குடியரசுத் தலைவர் தந்த கட்டளைகளை அடக்கிய அறிக்கையை 1960 ஏப்ரல் 27-ம் நாளன்று இந்திய உள்நாட்டுத் துறை அமைச்சர் பாராளும் மன்றத்தின் முன் வைத்தார். அந்த அறிக்கையை இந்திய தேசிய மொழிகள் முன்னேற்ற மன்றம் கூர்ந்து கவனித்தது. இம்மன்றம், கட்டளைகள் தெளிவாகவும் உறுதியாகவும் இல்லாதது கண்டு, தன் ஏமாற்றத்தைத் தெரிவித்துக்கொள்கிறது அதோடு அறிக்கை ‘இந்திக்குத் தரப்பட்ட இவ்விடமானது, இந்தி பேசுகிற மக்களை மிக உயர்ந்த இடத்தில் அமர்த்துவதாகவும், இந்தி பேசாத மக்களைக் கல்லறையில் தள்ளும் கொடிய தீர்ப்பாகவும் அமைந்துள்ளது, என்பதையும் காட்டுகிறது. 4-9-59 அன்று பிரமதர் அவர்கள் பாராளும் மன்றத்தில் பேசும்போது, ‘ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியை வைக்கும்போது, இந்தி பேசாத மக்களின் ஒப்புதலைப் பெறாது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது!’ என்று உறுதி தந்தார்.

பண்டிதர் சொன்னார் “இந்தியைத் திணிக்கமாட்டோம்; அதை ஆட்சி மொழியாக்கும்போது பிற மாநில மக்களின் கருத்துக்களையும் அறிந்துதான் செயல்படுவாம். இந்தி பேசாத மக்களின் சம்மதத்தையும் அறிந்துதான் கொண்டுவருவோம்!” என்று அன்று சொன்னார். தெருக்கூட்டங்களில் மட்டுமில்லை; பாராளும் மன்றத்திலும் சொன்னார், ஒன்றுக்கு இரண்டு முறை! அப்போதெல்லாம் இந்திய ஒற்றுமையைக் காட்டிக் காட்டிப் பேசினார், முட்டாள்களாக்குவது போல். குடியரசுத்தலைவர் “இந்திதான் ஆட்சிமொழி இன்றே எல்லா அலுவல்களும் இந்தியிலேயே நடக்கட்டும்!” என்றே சொல்லிவிட்டார். சொன்ன அன்றே இவர்களால் வானளாவப் பேசப்பட்ட இந்திய ஒற்றுமை சுக்குநூறாக உடைபட்டுவிட்டது. ஆம்! அதைத்தான் வங்கக் கல்விமான்கள் பலர் தொடுத்திருக்கும் அறிக்கை காட்டுகிறது!

அதனைத் தகுதிவாரியாகக் குடியரசுத் தலைவர் ஒப்புக்கொள்வார் என்று, இம்மன்றம் எதிர்பார்த்தது. கொஞ்ச நாட்களில், அகில இந்திய ஊழியத் தேர்வுகளுக்கு ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியே இருக்கும் என்று குடியரசுத் தலைவரின் கட்டளை கூறுகிறது. அவர்கள் அந்தக் கோணத்தில் மற்றைய இந்திய மொழிகளைப் பற்றிச் சிந்திக்கக்கூடவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். இந்தப்படி உள்ள குடியரசுத் தலைவரின் கட்டளைகளை, இம்மன்றம் கடுமையாக மறுக்கிறது. இந்த முறை இந்தி பேசும் மக்கள் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த வாய்ப்பளிக்கிறது. அதோடு அகில இந்திய ஊழியங்களில் அறிமுகப்படுத்தப் படும் இந்த இரட்டை முறை, அகில இந்திய ஒற்றுமையைக் குலைக்கவும் கூடும்.

பகிரங்கமாகப் பண்டிதர் தந்த வாக்குறுதிக்கேற்ப, காலவரையின்றி ஆங்கிலமும் ஆட்சி மொழியாக இருக்கும்படி, குடியரசுத் தலைவர் தமது கட்டளையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று இம்மன்றம் அவரை வேண்டிக்கொள்கிறது. அதே நேரத்தில் இம்மன்றம் மற்ற இந்திய தேசிய மொழிகளின் வளர்ச்சிக்காகச் செலவழிக்கப்படும் விகிதத்தைவிட அதிக விகிதத்தில் இந்தியின் வளர்ச்சிக்காகச் செலவழிக்க வேண்டாம் என்றும் இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது!”

இப்படி முடிந்திருக்கிறது, அந்த மன்றத்தவர் விடுத்த அறிக்கை.

★

வங்கத்தவர் கொதித்தெழுந்திருக்கின்றனர். வாக்குறுதி தந்த பண்டிதர் வாய் மூடிக் கிடந்ததைச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். “வருகின்ற இந்தியால், வங்கத்தவர் வாழ்வு கெடும். இந்தி பேசாத மக்கள அனைவரும் இழி நிலையடையக் கூடும். இந்தி பேசுவோரைமட்டும் வாழ வைப்பதற்கென்றே இத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது மற்ற மக்களும் தமது நியாயமான அரசியல் உரிமைகளை அடைவதற்கு இனி வழியில்லை என்பதைச் சுட்டிக் காட்டித் தட்டிக் கேட்கின்றனர், பாராளும் பண்டிதரையும் கட்டளை இட்ட குடியரசுத் தலைவரையும். வங்கத்தவருக்கு வந்துள்ள இந்த உணர்ச்சி, வாழையடி வாழையாக வீரம் புரிந்த வண்டமிழர் மரபிலும் கொதித்திருக்கிறது.

தென்னக மக்களைச் சம்மட்டி கொண்டு அடிக்கும் தில்லிக் கொற்றத்தவர் இனியாகிலும் உணர்வரா? ஏக இந்தியா என்பது ஒரு கற்பனைப் பேச்சு என்று நாம் சொன்னோம். எள்ளி நகையாடிய காமராசர்கள் இன்று வங்கமும் சொல்வதைக் கண்டுவிட்டனர். அந்தக் கற்பனை உருவத்தைக் கட்டியழப் போகின்றனரா? அடிமை இருளிலிருந்து விடுபட்டு வரப் போகின்றனரா? “ஏகஇந்தியா என்பது பகற்கனவே! இதை வங்கம் உணர்ந்தது, இத்தினமே! தென்னகமே! நீ உணர்வது எத்தினமே?”-இதுவே சப்பத்தலையில் கழகம் அமைத்துள்ள போராட்டக் குழுவின் கேள்வி!

—மதுரையான்.

★

வாடா தம்பி வா!

பூக்காடு பிணக்காடாய் நாறும் போது
பைங்கிளியும் கோட்டானுய்க் கதறும் போது
சாக்காடு தமிழுக்கு வந்த போது
சதிகாரர் கொண்டுவந்த மொழியாம் பாதி
வேக்காட்டை ஒத்தபண்பு கெட்ட இந்தி
விரைவாக அரியணையில் ஏறும் போது
நோக்காடு சிறிதுமின்றி இருக்கின் றுயே!
நீதான்செந் தமிழ்நாட்டின் சேயா? வெட்கம்!

தென்னவனே! தன்மானக் குகைவாழ் சிங்கத்
திராவிடனே! நம்நாட்டில் உரிமை என்ன
அன்னியனின் இந்திக்கே? இதனைக் கேட்க
ஆளில்லை எனஎண்ணிக் கொண்டார் போலும்!
மன்னுபுகழ்த் தமிழ்த்தாயை விரட்டி விட்டு
மட்டரக இந்திக்கே ஆட்சி பீடம்
இன்னுமைந்தே ஆண்டுகளில் என்று சொன்னல்
இங்கிருப்போர் அடிமைகளா தலையை ஆட்ட?

குருதிசிந்திக் கொடிகாத்தோர் நமது முன்னோர்!
குலப்பெருமை குன்றியதா நம்மி டத்தில்?
குருதிநிறச் செங்கதிரோன் எழுந்து விட்டான்!
கீழ்த்திசையில்! எங்குமொரே எழுச்சி வெள்ளம்!
அருந்தமிழன் அண்ணுவின் பாச றையில்
அகிலத்தின் இளைஞரெலாம் குழுமி விட்டார்!
உரமுடையோய்! இந்தியினை வெளியே தள்ளி
ஒளிர்தமிழை வாழவைப்போம் வாடா தம்பி!

—அர. தமிழன்பன்.

எப்படியோ செத்தான்

கட்டாரித்தேவன் முரட்டுக்காளை; கட்டுக்கடங்காத காட்டு வெள்ளம். காளை புகுந்த வயலெல்லாம் பாழாகும்; காட்டாறு பாய்ந்த பகுதியெல்லாம் சிதைந்து போகும். கட்டாரித்தேவன் புகுந்த தெருவெல்லாம் இரத்தம் பெருக்கெடுக்கும்; அவன் பார்வை ஓடிய குடும்பத்தியெல்லாம் அழிவு தலையெடுக்கும். 'ஏன்' என்று கேட்டால் இடி; 'உன் வேலையைப் பார்' என்றால் உதை; 'குடும்பத்தைக் கெடுக்காதே' என்றால் குத்து வெட்டு!-இந்தப்படியாக எப்படியோ வளர்ந்துவிட்டான்.

திடீரெனக் குன்றுகளில் இருக்கும் காட்டு மரங்கள் அத்தனையும் பற்றி எரியும். முதல் நாள் மாலை தன் பயிர் தழைத்துக் குலுங்குவதைக் கண்டு சென்றவன், மறுநாள் காலையில் வெறும் பொட்டலைக் கண்டு கண்ணீர் வடிப்பான். மலையடிவாரத்தில் சுள்ளி பொறுக்கப் போனவள், காது இழந்தவளாய்த் திரும்புவாள். இரவில் தொழுவில் கட்டிப் போட்டுப் போன மாடுகள், காலையில் எங்கோ இருக்கும்; போன தடம் கூடக் கண்டுபிடிக்க முடியாது. வாய்க்கால்கள் அத்தனையும் நொடிப் பொழுதில் திசைமாறிக் கிடக்கும்; மடையும் திறந்திருக்கும். இத்தனையும் கட்டாரித் தேவனின் திருவிளையாடல்கள் என்று சொல்லத் தேவையில்லை.

சிறு பிள்ளைகளுக்குப் பொம்மைகளை அடுக்கிப் பார்ப்பதில் மிகுந்த ஆசையிருக்கும். அந்தக் காட்டு மிராண்டிக்கோ ஊர் அமைதியைக் குலைத்து விடுவதில் ஆசை!

கேட்பாரற்று வளர்ந்துவிட்ட அந்தக் கட்டாரித்தேவனைக் கண்டு, நல்லோரைப்போலவே தீயோரும் பயந்தனர். ஏனெனில் அவன் தீயோருக்கெல்லாம் தீயோன்.

அஞ்சி அஞ்சிச் சாகின்ற கோழைகள அந்த ஊர் மக்கள். பொய்கைக கரை ஏந்தல் என்று அந்த மலையடிவார ஊருக்குப் பெயர். பசியகுன்று; அதன் அடியில் அந்தச் செங்கமலப் பொய்கை. மலையிலிருந்து வரும சுனைகளாலும் வானிலிருந்து வீழும் மழையாலும், அது எந்நாளும் தெள்ளிய நீரோடு விளங்கும். பொய்கையின் நடுவில் உள்ள மண்டபத்தைச் சுற்றி செங்கமலங்கள் இதழ் விரித்துச் சிரித்துக்கொண்டு இருக்கும். அவற்றை நோக்கி அழகுக் கலங்கள் போல் வெள்ளை வாத்துக்கள் செல்லும் அழகே தனி அழகு! படித்துறையில் குளிக்க வரும் மங்கையரின ஒளி முகத்தில் கண்டைகள் துள்ளும். அவற்றைக் கண்டானந்திக்கத் தெண்ணீர்க் கயத்துக் கயல்கள் துள்ளி எழும்; விழும். அழகு மலர்ந்த அந்தப் பொய்கையின் கரையில்தான் அந்தச் சிற்றூர் இருந்தது.

ஊருக்கே அழகைத் தந்த அந்தப் பொய்கைதான் என் வாழ்வுக்குக் களங்கத்தைத் தேடித் தந்துவிட்டது. அந்த ஊரிலுள்ள இளம் பெண்களெல்லாம் அவனுக்குப் பயந்து அதிகாலையிலேயே குளிக்கப் போய் விடுவர். குன்றில் சிவப்பு படர்வதற்கு முன்பே குளிக்கப் போனாள் அல்லி. குளிக்கும்போதுகூடத் துன்பமில்லை குளித்துத்தலையை உலர்த்திக் கொண்டு வீடு திரும்பும்போதுதான் அந்தக் கொடுமை நடந்துவிட்டது. சே! எதிர்பாராத கொடுமையில்லை இது. என்றாலும் நெஞ்சம் பொறுக்கவில்லையே! அதிலும் மலையில் காவல் காத்துவிட்டுவரும் என் கண்களிலா, அந்தக் கொடுமை பட வேண்டும்? அல்லி என் தங்கைகூட இல்லை. ஆனாலும்! எனக்கு மனித இதயம் இருக்கிறதே! அவளுக்கும் எனக்கும் இரத்தத் தொடர்புகூட இல்லாவிடினும், என் நெஞ்சில் சமுதாய நலன் என்ற எண்ணம் இருக்கிறதே! எனவேதான் என்னால் அந்தக் கொடுமையைக் கண்டும் வாளாய் இருக்க முடியவில்லை. அவனது பலத்திற்கு முன்னே என் கைகள் சாதாரண முருங்கைக் காய்கள்! கொதித்ததால், என் சராசரி பலத்தை அறியாமல் அந்த விலங்கோடு மோதிவிட்டேன். என்னை மடக்குவதற்கு அவனுக்கு அத்தனை தொல்லை வேண்டப்படவில்லை. கண் மூடிக் கண் திறப்பதற்குள் என்னைப் புரட்டு புரட்டென்று புரட்டி எடுத்துவிட்டான். என் மானமே போய்விட்டதாக எண்ணினேன். ஆனால்என்னால் எழக்கூட முடியவில்லை. என் நினைவு கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து, பின் ஒரேயடியாகக் கட்டையாகி விட்டேன்.

★

அவன் ஒரு மாமலை. எனக்கு நன்ருகத் தெரிகிறது. அதே நேரத்தில் சிற்றுளியால் மாமலையும் தகரும் என்றெழுதி வைத்த எழுத்தும் நினைவுக்கு வருகிறது. ஊரிலுள்ள மற்றவர்கட்கெல்லாம் மனைவி மக்கள் என்ற பந்தங்கள் இருக்கின்றன. அவர்களுக்குக் கட்டாரித்தேவனைத் தொலைத்துக் கட்ட வேண்டும் என்ற எண்ணம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அத்தனை பேரும் எலிகள். பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற சிக்கல்! நான் துணிந்தேன். எனக்கோ பந்தபாசம் ஏதும் இல்லை. யாரும் நான் இந்த முயற்சியில் செத்துவிட்டால் அழப் போவதுமில்லை; கதறப் போவதுமில்லை. நானே மணி கட்ட வேண்டியதுதான். அவனைத் தேடி அலையத் தொடங்கினேன்.

நான் அரசாங்கக் காவலாளி என்ற முறையில், அவனைக் காவல் துறையினர் துணை கொண்டு அடக்கி விடலாம். ஆனால் என்னுள் கிளர்ந்தெழுந்த ஆண்மை, அவனைத் தனியனாகவே அறை கூவச் சொல்லியது. எழுந்துநின்றேன் கட்டாரித் தேவனைப்பற்றி அஞ்சி நடுங்கிச் செத்துக்கொண்டிருந்த ஊராரிடையே முடிந்தபோதெல்லாம் துணிவை ஊட்டினேன் "என்றேனும் அவனைக் கொன்றே தீர்வேன்; எப்படியும் அவனை அழித்தே தீர்வேன்!" என்று சூளுரைத்தேன். அவனை மூலைமுடுக்குகளிலெல்லாம் தேடி அலைந்தேன். காடு கரைகளிலெல்லாம் கண்ணி வைத்தேன். அவன் கிராமத்திற்குள் வரும் நேரமும் தெரிவதில்லை. மலையில் எங்கோ ஒரு மூலையில் அவனது குடிசை இருக்கிறது என்கிறார்கள். நான் தேடியலைந்தமட்டும், அவன் குடிசையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஊர்ப் பெரியவர்கள் ஒன்றிரண்டு பேர் "அமைதியாகச் செல்!" என்றனர். நான்தான் வெறிக்கிரையாகிவிட்டேனே! 'அவன் செத்தான்!' என்ற சேதி உலகத்திற்கு எட்டினால்தானே, என் நெஞ்சம் அமைதியுறும்.

காவலுக்காகக் குன்றின் மேலேறிக் கொண்டிருந்தேன். அப்போது மூலை வீட்டு இராமசாமி ஓடி வந்தான. "அண்ணே! கட்டாரி வந்திருக்கிறான். கீழவீட்டுச் சின்னானை மிரட்டிக் கொண்டிருக்கிறான். பத்து கலம்நெல்லும் இருபது ரூபாயும் உடனடியாய் வைக்க வேண்டுமாம். மிரட்டிக்கொண்டிருக்கிறான். அவன் ஏழை. என்ன செய்வான், பாவம்?" என்றான், பாதிப் பேச்சும் பாதி மூச்சுமாய். அதைக் கேட்டு முடிப்பதற்குள் அவனை விலக்கி விட்டுக்கொண்டு இறங்கி ஓடினேன் இராமசாமியும் தொடர்ந்தான். அடிவாரத்தை அடைவதற்குள்...ஐயோ, அந்த ஏழையின் குடிசை எரிந்துகொண்டிருந்தது! நான் ஏமாந்துவிட்டேன். வாய்ப்பைத் தவற விட்டுவிட்டேன். சற்று முந்தியிருந்தால், அந்த வீடும் எரிந்திருக்காது; அவனும் தப்பித்திருக்க முடியாது. இரண்டில் ஒன்று தீர்ந்திருக்கும்.

தளர்ந்த நடையில் திரும்பினேன். சே! கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை.

நாட்கள் பலவற்றுக்குப்பின்...... வேலையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தேன். பொழுதுபுலரும்வேளை... கூட்டுவண்டி ஒன்று மாடுகளுடன் பக்கத்துப் பாதையிலிருந்து கீழே விழும் ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்தேன். சின்னானின் வண்டிதான் உருண்டுகொண்டிருந்தது. வண்டியை மலைச்சரிவில் தள்ளிவிட்டுவிட்ட கட்டாரித்தேவன் ஓடிக்கொண்டிருந்தான் நானும் விரட்டினேன். ஏனோ, இன்றவன் ஓடுகிறான்! நான் நான்கெட்டு வைப்பதற்குள் அவன் பத்தடி ஓடினான். என்னால் பிடிக்க முடியவில்லை. தோல்வியை ஒப்புக்கொள்கிறேன். சில வினாடிகளில் அவன் என் பார்வைக்குத் தெரியாமலே எங்கோ மறைந்துவிட்டானே! புதருக்குள் மறைந்தானோ? சரிவுக்குள் விழுந்தானோ?

வேதனையுடன் திரும்பினேன். நான் செய்ய நினைப்பது சரியென்றே, எனக்குப்பட்டது ஆனால் அத்தனை முயற்சிகளும் பாழாகின்றனவே! ஏமாற்றம் என் நெஞ்சைக் கொதித்திட வைத்தது.

இரண்டு நாள்கள் கழிந்திருக்கும். இன்று காலையில் எப்படியும் அவன் வேலாங் குன்றுக்கு வருவான் என்றார்கள். ஊராருக்கு எப்படி இந்தச் சேதிகள் கிடைத்தனவோ, என்னிடம் சொன்னார்கள். "வந்தது வேளை!" என்று கத்தியை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

கொடி வழிகளின் ஊடே சென்றேன். வழியில் பட்ட குருவி காக்கைகளைத் தட்டிவிட்டுக்கொண்டே ஓடினேன். போன வேகத்தில் குயிலான் ஓடையில் கால் தவறி விழுந்தேன். எழுந்ததும் நிற்காமல் கூட நடந்தேன். வழிகின்ற குருதியைப் பற்றிய உணர்வுகூட இல்லை எனக்கு. விரைந்து நடந்த எனக்கு ஒரே குறி வேலாங்குன்றுதான். வேலாங்குன்றின் உச்சிக்கு வந்துவிட்டேன். பார்வையை, எட்டிய மட்டும் வீசினேன். வேலாங்குன்றுக்கும் செம்பியன் குன்றுக்கும் இடைவெயில்... ஆ...வெற்றி! வெற்றி! அதோ, எங்கோ பார்த்துக்கொண்டு நிற்கிறான் கட்டாரி!

காட்டுப்பன்றி தலையை உதறிக் கொண்டு நிற்பதுபோல நின்றான்; ஓடினேன் இனி அவன் தப்பமுடியாது. கத்தியை எடுத்தேன்; ஓங்கிப் பிடித்தேன்; வெறிகொண்டவனாய் ஓடினேன். அவனை அடைய நான் நிற்குமிடத்திலிருந்து இருநூறு அடி ஓடவேண்டும்; ஓடினேன். அப்போதுதான் என்னைப்போலவே எதிர்திசையிலிருந்து மற்றொருவனும் ஓடி வந்தான். ஆம்! இப்போது நன்ருகத

— 12-ம் பக்கம் —

மல்லிகைப் பந்தல்

ஜெ.

11. ராதா, உனக்குப் பிடித்திருக்கிறதா ?

நாரா நாச்சியப்பன்

தங்கத்தைக் காணவில்லை என்று புளியமரத்துச் சந்துக்குப் போய்வந்த நடராசன் தெரிவித்தவுடனே ராதா திகைத்துப்போய்விட்டாள். அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. சிறிது நேரம் அப்படியே அசைவற்று நின்றாள். அந்தக் குழப்பமான அமைதியைக் குலைத்தது நடராசனின் கேள்வி.

"ராதா! தங்கத்தின் வீட்டில் போய்ச் சொல்லுவோமா ?"

என்ன செய்வதென்றே புரியாமல் குழம்பிக்கொண்டிருந்த அவளுக்கு இந்த யோசனை ஒரு வழிகாட்டியாக இருந்தது. "சரி, வாருங்கள் !" என்று அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு புயல் வேகத்தில் வீதியில் நடைபோட்டாள் ராதா. நடராசனை மட்டும் இழுத்துக்கொண்டு நடக்காவிட்டால் அவள் பறந்திருப்பாளோ என்னவோ ?

அவர்கள் தங்கத்தின் வீட்டுக் கதவைப் படபடவென்று தட்டியவுடன், கந்தசாமி வாத்தியார் வந்து கதவைத் திறந்தார். மாடியில் இருந்த அண்ணாமலைப் பண்டிதர் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். அடுக்களையில் அப்போதுதான், தங்கம் திரும்பி வருவதை எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்திருந்து எடுத்து வைக்கப்பட்டிருந்த சாப்பாட்டுக்கெதிரில் தடுக்கில் படுத்திருந்த மரகத அம்மாள் எழுந்து உட்கார்ந்தாள்.

கந்தசாமி வாத்தியார் தங்கம்தான் கோயிலிலிருந்து திரும்பி வந்துவிட்டாள் என்ற எண்ணத்தில் சாவதானமாகக் கதவைத் திறந்தார். அவர் கதவைத் திறந்துவிட்டவுடனே, ராதா உள்ளே பாய்ந்து வந்தாள். நடராசனும் பின்னால் நுழைந்தான்.

"ராதா...... தங்கம்?" என்று கந்தசாமி வாத்தியார் கேட்பதற்குள்ளே, "புளிய மரச் சந்தில்......" என்று நடராசன் சொல்ல ஆரம்பித்தான். புளிய மரச் சந்து என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனேயே, மரகத அம்மாள் பதறிக்கொண்டு அடுக்களையிலிருந்து ஓடி வந்தாள். நடராசன் நடந்ததையெல்லாம் விவரித்துச் சொல்லி முடிக்கும் வரை பெற்றவர்கள் இருவரும் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தனர். அவன் சொல்லி முடித்து, அவளைக் காணவில்லை என்று தெரிவித்தவுடன், "மகளே! தங்கம்!" என்ற சொற்கள் துயரக் குறிப்புக் கலந்ததாய் இருவர் வாயிலிருந்தும் ஒரே சமயத்தில் வெளிப்பட்டன. அவர்கள் இருவரும்-தாயும் தந்தையும் தங்கத்திடம் வைத்திருந்த அன்பில் எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்று சொல்லமுடியாமலிருந்தது. கந்தசாமி வாத்தியார் தங்கத்தைக் கண்ணுக்குக் கண்ணாக நேசித்தார் என்று சொன்னால், மரகத அம்மாள் அவளைத் தன் உயிருக்கு உயிராகப் போற்றிவந்தாள் என்று சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட அவர்கள் இருவரும், புத்தம் புதிதாகத் தங்கத்தைக் காணவில்லை என்ற செய்தியைக் கேட்டதும் தத்தம் உள்ளத்திலே கொண்ட திகைப்பும், பிரமிப்பும், கலக்கமும், துயரும், கவலையும் அந்த உணர்ச்சிகளின் வெளிப்பாடாக வெளிவந்த வார்த்தைகளும் ஒன்றாக இருந்தன என்பது ஆச்சரியப்படத் தக்கதே அல்ல. கீழே ஏற்பட்ட கலவரமான சந்தடியைக் கேட்டு, மெல்ல மெல்லப் படிகளிலே அடியெடுத்து வைத்து இறங்கி வந்தார் அண்ணாமலைப் பண்டிதர்.

என்ன செய்தி யென்று கேட்டுத் தெரிந்துகொண்ட அவர் சிறிதேனும் கலவரப்பட்டவராகத் தோன்றவில்லை.

ஆனால், அவர் நடராசனை நோக்கிப் பேசிய அந்தச் சொற்கள் அவர் மனவருத்தத்தை ஓரளவு வெளிக்குப் புலப்படுத்துவதாக இருந்தன. 'நடராசா, உன்னுடைய பைத்தியக்காரத்தனத்தால், தான் அந்தப் பெண் காணாமல் போய்விட்டாள் !" இந்த வார்த்தைகளைத்தவிர அவர் மேற்கொண்டு எதுவும் சொல்லவில்லை. அவர் அவ்வாறு கூறியபோது நடராசனின் முகத்தில் ஏற்பட்ட சங்கடமான உணர்ச்சியை யாரும் கவனிக்கவில்லை.

கந்தசாமி வாத்தியார் அப்பொழுதே ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு தங்கத்தைத் தேடக் கிளம்பினார். ஆனால், அண்ணாமலைப் பண்டிதர், காலையில் தேடிகொள்ளலாமென்று சொல்லி அவரைத் தடுத்துவிட்டார்.

பெரியவரின் வார்த்தையை மீற அவருக்குத் துணிவில்லை. எல்லோரும் தத்தம் படுக்கைக்குத் திரும்பினார்கள். நடராசனும் ராதாவும் வெளியில் வந்தார்கள். ராதாவை வீட்டில் விட்டுவிட்டு நடராசன் அந்த இருட்டில் கால் போன போக்கில் நடந்து சென்றான். ஊரைச் சுற்றிச் சுற்றிக் கடைசியில் அந்தப் புளியமரச் சந்துக்கே திரும்பி வந்தான். அவன் அந்தச் சந்துக்குத் திரும்பி வந்தபோது நள்ளிரவு நேரம். அந்தப் புளியமரத்தின் சில கிளைகள் குலுங்கிக்கொண்டிருந்தன. மரத்தடியில் ஒரு லாந்தர் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. யாரோ ஒரு மனிதனுடைய உருவம் நிழல்போலத் தரையில் காலூன்றி நின்று கொண்டிருந்தது தெரிந்தது. இப்போது நடராசன் அச்சப்படவில்லை. நேராக மரத்தடியை நோக்கி நடந்தான்.

ஆள் வரும் ஓசையைக் கேட்டு அந்த மரத்தடியில் நின்றவன் சந்தேகத்தோடு திரும்பிப் பார்த்தான். மரத்தில் இருந்தவனும் குலுக்குவதை நிறுத்திவிட்டு நடராசன் வருவதை உற்று நோக்கினான். "ஐயா ! இந்தச் சந்தில் ஒரு பெண் மயக்கமாகக் கிடந்தாளே, நீங்கள் பார்த்தீர்களா ?" என்று கேட்டான் நடராசன். அவர்கள் தெரியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். கடைசியில் நடராசனுக்கு ஏற்பட்ட சிறு நம்பிக்கையையும் கைவிட வேண்டியதாயிற்று. பித்துப் பிடித்தவனைப்போல் அவன் நடந்து சென்றான். தன்னையறியாமலே அவன் கால் போன போக்கில் நடந்து தன் வீட்டு வாசலுக்கே வந்து சேர்ந்தான்,

வீட்டுக்குள் நுழையவே அவனுக்கு விருப்பமில்லை. ஆனால், அவன் கால்கள் அயர்ந்து போயிருந்தன. ஒரே களைப்பாயிருந்தது. ஆகவே கொஞ்ச நேரம் தூங்கி ஓய்வு பெறலாம் என்று அவன் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டதும் நேராகத் தன் அறைக்குச் சென்று படுத்துக்கொண்டான். ஆனால் தூக்கம் தான் வரவில்லை.

மறுநாள் காலையில் கந்தசாமி வாத்தியார் ஒரு பக்கம், முருகேச வாத்தியார் ஒரு பக்கம் நடராசன் ஒரு பக்கமாக ஊரையும் ஊரைச் சுற்றி இருந்த இடங்களையும் தேட ஆரம்பித்தார்கள், வாத்தியார்கள் இருவரும் பள்ளிக்கூட மணியடிக்கிறவரையிலே எங்கெங்கோ தேடிப் பார்த்துவிட்டு, வழியில் தெரிந்த மிக முக்கியமான நண்பர்கள் சிலரிடம் தங்கம் தட்டுப்பட்டால் தெரிவிக்கும்படி கூறிவிட்டுப் பள்ளிக்குச் சென்றுவிட்டார்கள். பள்ளிக்கூடத்தில் கந்தசாமி வாத்தியாருக்கு வேலையே ஓடவில்லை. சாயுங்காலம் பள்ளிக்கூடம் விட்ட பிறகும் வெகு நேரம் ஊரைச் சுற்றித் திரிந்துவிட்டுத் தான் வீட்டுக்குத் திரும்பினார். மரகத அம்மாள் அன்று முழுவதும் சாப்பிடவேயில்லை. வீட்டில் இருந்த அண்ணாமலைப் பண்டிதர் இருந்த இடத்தில் இருந்துகொண்டே "கவலைப்படாதே! தங்கம் கிடைத்துவிடுவாள் !" என்று எவ்வளவு சமாதானம் சொல்லியும் அவள் மனம் அமைதி யடையவில்லை. காலையில் வீட்டை விட்டுப் புறப்பட்ட நடராசன் திரும்ப வரவேயில்லை. கதலிப்பட்டணத்திற்குத் தினந்தோறும் போகும் பழக்கப்படியும் அவன் வரவில்லை. ஒரே மூச்சாக அவன் தங்கத்தைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தான் போலும். இவ்வளவு அமளிக்கிடையிலும் சுந்தரேசன், அண்ணாமலைப் பண்டிதரிடம் கடிதம் வாங்கிக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டுவிட்டான்.

பொழுது சாய்ந்து இருள் பரவி வரத் தொடங்கியது. அடுத்த வீட்டு ராதா மெல்லத் தங்கத்தின் வீட்டுக்கு வந்தாள். பத்து நாள் பட்டினியும் நூறு நாள் கவலையும் ஒன்று சேர்ந்தது போன்ற தோற்றத்தோடு உட்கார்திருந்த மரகத அம்மாளைப் பார்த்ததும் அவளுக்கே அழுகை யுண்டாகிவிட்டது. எல்லாம் இந்த நடராசனால் வந்த வினை என்றுதான் அவள் நினைத்துக் கொண்டாள். அவன் மட்டும் தங்கள் பாதையில் குறுக்கிடாமலிருந்திருந்தால் இதெல்லாம் நேரிட்டிருக்காது என்பது அவள் எண்ணம்.

அவள் வந்த சிறிது நேரத்திற்குப் பிறகு முருகேச வாத்தியாரும் அங்கு வந்து சேர்ந்தார். கந்தசாமி வாத்தியார் அவரைப் பார்த்துப் பார்த்து விம்மி விம்மிப் பெருமூச் செறிந்தார். வாய்விட்டு ஓசையிட்டு அவர் அழவில்லையே தவிர, அவர் நெஞ்சம் துயரத்தால் புழுங்கிக் கொண்டிருந்தது. கண்களில் நீர் தடையில்லாத ஊற்றுப் போல் ஊறி வழிந்து கொண்டேயிருந்தது.

யாருக்கு யார் சமாதானம் சொல்லுவதென்று தெரியாமல் இவர்களெல்லாம் கீழே இம்மென்று துயரத்தோடு இருந்து கொண்டிருந்தார்கள். அண்ணாமலைப் பண்டிதரோ மாடியில் தம் அறையில் இருந்தபடி திருவாசகத்தில் திருவூசல் பாடிக்கொண்டிருந்தார். புயலடிக்கும் நேரத்தில் ஆனந்த பைரவி பாடியது போல இருந்தது அவருடைய போக்கு. பாட்டு முடிந்ததும் அவர் கீழே இறங்கி வந்தார். அவர் சிறிதுகூடக் கவலைப் படாதவர் போல, புன்சிரிப்புடன், கந்தசாமி வாத்தியாரையும்-குறிப்பாக மரகத அம்மாளையும் நோக்கி, "ஒரு நாள் தங்கத்தைப் பிரிந்திருப்பதற்கே நீங்கள் இவ்வளவு துயரப்பட்டால், அவளைத் திருமணம் செய்து கொடுத்த பிறகு என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார். அவர்கள் இருவராலும் வாய் திறந்து பதில் சொல்ல முடியவில்லை.

"திருமணம் செய்து கொடுத்தால், மகள் எங்கே போனாள், எப்படி யிருக்கிறாள் என்ற செய்தியெல்லாம் அவ்வப்போது தெரிந்துகொள்ளலாம். விரும்பியபோது போய்ப் பார்த்து வரலாம். இப்போது அவள் எங்கே இருக்கிறாள், என்ன ஆனாள்? என்பதே தெரியவில்லையே. எப்படி வருத்தமில்லாமல் இருக்கும் ?" என்று கேட்டாள் ராதா.

அவர் கேட்ட மாதிரியையும் நடந்துகொண்ட போக்கையும் பார்த்தால் அவரே தங்கம் இருக்கும் இடத்தை அறிந்து வைத்திருப்பது போல எண்ணவும் இடமேற்பட்டது. துயரத்தோடு சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவர்கள்

அனைவரும், திடீரென்று அண்ணுமலைப் பண்டிதர், கடுமையான குரலில், "ஏன் தங்கம் எங்கே போயிருந்தாய்?" என்று கேட்டபோது, இவருக்கு என்ன கிறுக்குப் பிடித்து விட்டதோ என்று நினைத்துக்கொண்டே நிமிர்ந்து பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்! அங்கே அவர்கள் மத்தியில் தங்கம் நின்று கொண்டிருந்தாள். மரகத அம்மாள் ஓடிச் சென்று அவளைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்டாள். அண்ணுமலைப் பண்டிதர் தான் தன் மாய சக்தியால் அவளை அங்கே வரச் செய்துவிட்டார் என்று மூட நம்பிக்கையில் ஆழ்ந்துள்ள அவள் மனம் எண்ணமிட ஆரம்பித்தது ஆனால் அவளைத் தேடி அழைத்து வந்தது நடராசன் என்பது தெரியும் படியாக அவனும் அங்கே வந்திருந்தான். வெளிக்கதவு திறந்தே கிடந்த படியால் அவர்கள் உள்ளே நுழைந்ததை யாரும் காணவில்லை. ஆனால் தங்கத்தைக் கண்டவுடன் எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. வானத்திலிருந்து அவள் அங்கே வந்து திடுதிப்பென்று குதித்தது போல் இருந்தது. மரகதம்மாள் அவளைப் பிடித்தணைத்துக் கொண்டு "தங்கம், எங்கே போயிருந்தாய்?" என்று கேட்டாள். ராதாவும், "தங்கம் உனக்கு என்ன ஏற்பட்டது?" என்று கேட்டாள்.

"எல்லாம் அப்புறம் சொல்லுகிறேன். எனக்கு இப்போது ஒரே பசியும் களைப்புமாயிருக்கிறது" என்ருள் தங்கம். உடனே, மரகத அம்மாள் அவளுக்குச் சோறு போட்டுத் தூங்கச் செய்தாள். முருகேச வாத்தியாரும் நடராசனும் வீட்டுக்குத் திரும்பினுர்கள். ராதா, அங்கேயே தங்கத்துக்குத் துணையாகத் தங்கியிருப்பதாகச் சொன்னுள். எல்லோரும் மன நிம்மதியுடன் சாப்பிட்டுவிட்டுப் படுக்கச் சென்ருர்கள்.

அன்று இரவுப் பொழுது அமைதியாகக் கழிந்தது.

மறு நாள் காலையில் தங்கமும் ராதாவும் மல்லிகைப் பந்தலுக்குப் போய் அதனடியில் அமர்ந்துகொண்டார்கள்.

"ராதா, நீங்கள் இருவரும் அந்தச் சந்தில் ஏன் என்னைத் தனியே விட்டு விட்டுப் போனீர்கள் ?" என்று தங்கம் கேட்டாள். ராதா நடந்த விவரத்தையெல்லாம் சொல்லிவிட்டு, "தங்கம் நீ எப்படி அங்கிருந்து காணுமற் போனுய்" என்று கேட்டாள்.

"ராக்கப்பன் என்னைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான்" என்று தங்கம் சொன்னவுடனே, "ஆ!"வென்று அலறிவிட்டாள் ராதா. "பயப்படாதே! நடந்தது முழுவதையும் கே"ளென்று தங்கம் கூறினுள். அவள் பாதி கூறிக் கொண்டு வரும்பொழுதே, "அந்தச் சூனியக்காரக் கூனற் கிழவியிடமிருந்தும், ஆவியுலகத்து ராக்கப்பனிடமிருந்தும் நீ எப்படித் தப்பி வந்தாய் ?" என்று கேட்டாள் ராதா. "நடராசன் உதவியால்" என்று தங்கம் பதிலளித்ததும், ராதாவின் வியப்பு மேலும் பெருகியது.

அதன் பிறகு நடராசன் தனக்கு எப்படி உதவி செய்தான் என்பதைத் தங்கம் விவரித்துரைக்க ஆரம்பித்தாள்.

"அந்த ராக்கப்பன் தன் ஓலைக் குடிசையில் என்னைச் சிறை வைத்து, அடிக்கடி வந்து தன்னைத் திருமணம் செய்துகொள்ள ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தினுன். ஆனுல், தான் ஒப்பி வராததைக் கண்ட அவன் என்னைப் பலவந்தமாகக் காட்டுப் பிள்ளையார் கோயிலுக்குத் தூக்கிக்கொண்டு போய் அங்கு தாலி கட்டிவிடுவதென்று முடிவு கட்டிவிட்டான்"

"ஆமாம், ஆவிகள் பிள்ளையார் கோயிலைக் கண்டால் பயப்படும் என்பார்களே!' என்று இடையிட்டுக் கேட்டாள் ராதா.

"அவன் ஆவியுமில்லை, பிசாசுமில்லை. நானும் உன்னைப்போல் தான் முதலில் அவனை ஆவியுருவமென்று எண்ணிப் பயப்பட்டேன். ஆனுல்



நடராசன் வந்த பிறகுதான் ராக்கப்பனும் ஒரு சாதாரண மனிதன்தான் என்பதைத் தெரிந்துகொண்டேன். சாயுங்காலம் அவன் என்னைத் தூக்கிக் கொண்டு போகும்போது அந்தப் பாதையாக நடராசன் சென்றுகொண்டிருந்தார். அவரைக் கண்டவுடன் எனக்குச் சிறிது தைரியம் பிறந்தது. கூச்சலிட்டேன். என் கூச்சலைக் கேட்டுவிட்டு அவர் நெருங்கி வந்தார். என்னைத் தூக்கிச் சென்றதை அவர் கண்டுபிடித்தார். உடனே பாய்ந்து வந்து, அவனை வழி மறித்தார். அவன் என்னைக் கீழே இறக்கி வைத்துவிட்டு அவரோடு வாதாடினுன். வார்த்தை தடித்து ஒருவரையொருவர் திட்டுவதில் முடிந்தது. திட்டுவது மாறி அடிதடியில் வந்து நின்றது. அவர் தன் ஒற்றைக்கையால் அவனை ஓங்கி ஓர் அறை அறைந்தார். அவன் கன்னம் கூவி வீங்கிப் போய்விட்டது. இருந்தாலும் அவன் மிகுந்த ஆக்கிரோஷத்தோடு அவர் மீது பாய்ந்தான். அவர் போராடிக்கொண்டே அவன் காலை இடறிவிட்டார். அவன் நிலை தடுமாறிக் கீழே விழுந்தான். அவன் பல் ஒரு கல்லில் மோதிச் சிதறுண்டு விழுந்தது அவன் மயங்கிச் சோர்ந்து கீழே விழுந்தான். அவனைப்பற்றிச் சிறிதும் கவலைப் படாமல் அவர் என்னைத் திருப்பி அழைத்துக்கொண்டு வந்தார். நானும் இங்கு வந்து சேர்ந்துவிட்டேன். அவர் மட்டும் இல்லாவிட்டால்" என்று தங்கம் கூறியபோது.

"பாவம்! நீ பேய்க்கு வாழ்க்கைப் பட்டிருக்க வேண்டி வந்திருக்கும்!" என்ருள் ராதா.

"அவன் பேயல்ல! அவன்தான் அசல் ராக்கப்பன்! "என்ருள் தங்கம். ராதா வியப்புடன்," அப்படியானுல், பேயாக இருக்கும் ராக்கப்பன் யார் ?" என்று கேட்டாள் ராதா.

"தூக்கிலே தொங்கிச் செத்தவன் ராக்கப்பனல்ல. யாரோ அவனைப்போல் கொடூரமான உருவமுள்ளவன். குடும்பக் கவலை தாங்கமாட்டாமலோ, நல்ல மனைவி வாய்க்காமலோ அவன் தூக்குப் போட்டுக்கொண்டு செத்திருக்கிருன். அவன் செத்த நாளும், ராக்கப்பன் இந்த ஊரை விட்டு வெளியூருக்குப் பிழைக்கச் சென்ற நாளும் ஒன்ருக இருந்திருக்கின்றன. ஆகவே, இறந்தது ராக்கப்பன்தான் என்று ஊரார் முடிவு கட்டிவிட்டார்கள். ராக்கப்பனுடைய ஆவிக்கு அவனுடைய தீய குணங்களையெல்லாம் ஏற்றிச் சொல்லி விட்டார்கள்."

"அப்படியானுல் நடராசன் சொன்னதெல்லாம் உண்மைதானு? பேயென்பது, வீண் மனப் பிராந்திதானு ?" என்று கேட்டாள் ராதா.

"சந்தேகமில்லாமல்"

"தங்கம், நீ நடராசனைப்பற்றி என்ன நினைக்கிருய் !"

"பைத்தியமல்ல - பகுத்தறிவுவாதி என்று எண்ணுகிறேன்."

அடுத்த இதழில்

சிங்களத் தேர்தல்

பற்றிய

கட்டுரை

வரும்.

"அதைக் கேட்கவில்லை தங்கம். உனக்கு அவரைப்பற்றி என்ன தோன்றுகிறது ?"

"தோன்றுவதற்கு என்ன இருக்கிறது? நல்லவர்! அழகானவர்! ஆனுல் அந்தக் கை மட்டும் ஒழுங்காக இருந்திருந்தால்......" என்ருள் தங்கம்.

"கை மட்டும் ஒழுங்காக இருந்திருந்தால்......என்ன செய்வாய்?" என்று கேட்டாள் ராதா.

தங்கம் பேசாமலிருந்தாள். அவள் உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது.

தங்கத்திற்கும், நடராசனுக்கும் முடிச்சுப் போடப் பேச்சு நடந்ததெல்லாம் ராதாவுக்கு நன்ருகத் தெரியும். ஆனுல் தங்கத்திற்கு நடராசனுடைய பைத்தியக்காரத் தனமும், முடம்பிடித்த கையும் பிடிக்கவில்லை; அதனுல் திருமணம் நடக்கவில்லை என்பதும் அவளுக்குத் தெரியும்.

"தங்கம், நானுயிருந்தால், அவர் கை ஒழுங்காக இல்லாததற்காக அவரை வேண்டாமென்று ஒதுக்கிவிட மாட்டேன்."

"என்ன? என்ன? உண்மையாகவா?" என்று அவளை உற்று நோக்கினுள் தங்கம்.

"ஆம்" என்பது போல் நாணிக் கோணிக் குனிந்துகொண்டாள் ராதா. அவளுடைய முகத்திலே செம்மை படர்ந்திருந்தது.

தங்கம் அவளைக் கூர்ந்து நோக்கினுள். சிறிது நேரத்திற்குப் பிறகு, "ராதா, உண்மையாகத்தான் சொல்கிருயா? அந்த ஒற்றைக்கையரை உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டாள். அவள் கேள்வியில் கேலியோ, கிண்டலோ இல்லை என்பது நிச்சயம். ஆனுல் ஏதோ ஓர் உள்ளுணர்ச்சி ராதா அவனைக் காதலிக்கிருளா என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை அவளுக்கு ஏற்படுத்தியது போலிருந்தது.

ராதா அவளுக்கு எதுவும் பதில் சொல்லவில்லை. பேசாமல் எழுந்து. "தங்கம், நான் போய் வருகிறேன்." என்று சொல்லிவிட்டுத் தோட்டத்துப் பாதை வழியாகவே தன் வீட்டுக்குப் போய்விட்டாள்.

உண்மையில் அவள் நடராசனைக் காதலிக்கிருளா அல்லவா என்று தெளிவாகத் தெரிந்துகொள்ளத் தங்கத்தால் முடியவில்லை.

(தொடரும்)

போடுகிறான் இந்தி வெடி! பொறுத்தாலே சாவோமடி!

வடக்கத்திய வெறியர்கள் நாளொரு சூதும் பொழுதொரு சூழ்ச்சியும் செய்து தம்மொழிக்கு மணிமுடி சூட்டிட நினைக்கின்றனர். “எங்கள் பிணத்தின்மேல் இந்த இந்தி வரட்டும்! நெஞ்சில் துடிப்பிருக்கும் வரை, உடலில் மூச்சு உள்ளமட்டும் இந்தியை நுழையவிடோம்; எமக்குள்ள உரிமையை அழியவிடோம்!” என்ற போர் முழக்கத்தோடு ஆயிரக் கணக்கான மக்கள் வெடித்தெழுந்திருக்கின்றனர். தென்னகத்தார் கொதித்தெழுந்துவிட்டதைக் கண்டு, சிரித்துப் பேசி மயக்க நினைத்திருக்கின்றனர். அதற்கான செயலிலும் ஒரு புது முறையைக் கண்டுபிடித்துவிட்டிருக்கின்றனர். அதுதான் இனிக்க இனிக்கக் கட்டுரை எழுதி, இடையே நஞ்சைத் தடவித் தருவதாகும்.

வடநாட்டிலிருந்து வரும் “காரவன்” என்ற ஏடு இந்தத்தொண்டை மேற்கொண்டிருக்கிறது. கோட்டீசுவரர் என்பார் எழுதிய “மொழிச் சிக்கல்” என்ற கட்டுரையை அது வெளியிட்டிருக்கிறது. அந்தக் கட்டுரையை வெளியிட்டது வியாபார நோக்கத்திலில்லை; வெறிப் போக்கால்தான் என்றே படுகிறது.

பயிற்று மொழிக் கொள்கை பற்றி எழுதிட வந்திருக்கிறார் கட்டுரையாளர்; எப்படியும் இந்தியைப் பாட மொழியாக்கிட வேண்டுமென்று துடிக்கின்ற தன் நெஞ்சத்தை மறைக்க முயன்று ஏமாந்துவிட்டார்.

“சில மொழிகள் பழையன; கற்பதற்கு எளியன என்பதற்காக நாட்டின் ஒற்றுமையும் முன்னேற்றமும் பலியாகிவிடக் கூடாது” என்று தன் கட்டுரையைத் தொடங்குகிறார் அவர். மறைமுகமாக ஆங்கிலத்தை அவர் கண்டிக்கிறார் என்பதைத் தவிர வேறென்ன பொருள்?

“ஆங்கிலம் நமக்கு ஏற்கனவே அறிமுகமானது; இந்தியைவிடக் கற்பதற்கு எளிமையானது; உலகத் தொடர்பு மிக்கது; அது ஒன்றை மட்டும் கற்றாலே போதும், உலகத் தொடர்பை வளர்த்துக்கொள்ள!” என்கிறோம். அதை மறைமுகமாகக் கண்டிக்கிறார் கோட்டீசுவரர்!

நெஞ்சத் துணிவில்லாத கோழைகள், எதிர்ப்பைத் தாங்க முடியாத வஞ்சகர்கள், தென்னகத்தை ஏய்த்துவிடலாம் என்று இன்னும் எண்ணி முயல்கின்ற எத்தர்கள், வஞ்சகத்தைத் துணைக்கழைத்திருக்கிறார்கள். வாளை எடுக்க முடியாதவர்கள், நச்சுச் சொற்களுக்கு வண்ணம் பூசத்தானே நினைப்பர்?

“இவள் எனக்கு ஏற்கனவே அறிமுகமானவள்; செட்டுடனும் சீருடனும் குடும்பம் நடத்தத் தெரிந்தவள்; பாங்குடனும் பண்புடனும் பழகும் திறத்தினள்; அறிவு நிரம்பியவள்; அழகும் மிக்கவள்! இவளைத்தான் நான் மணந்துகொள்வேன்!” என்று சொன்னால், எள்ளி நகையாடுகின்றனர். “ஆகா! இவளை நீ பார்த்ததுமில்லையோ? பூத்துக் குலுங்கும் இவள் அழகு உன் விழிகளுக்கு விருந்தாகவில்லையோ? கண்கவர் இந்தக் கட்டழகிக்குக் குடும்பம் நடத்தத் தெரியவில்லை என்று கூறுகிறாய்? அதென்ன பிரமாதம்? பத்து நாள் பயின்றால் பதினோராம் நாள், அறுசுவையோடு உனக்கு அமுது வடிப்பாள்! என்ன இருந்தாலும் இவள் நம்மவளல்லவா?” என்று வந்தோருக்கெல்லாம் முந்தானை விரித்த இந்தியைக் கொண்டு வந்து காட்டுகின்றனர். அவளை வளப்படுத்தவும் வகைப்படுத்தவும் எத்தனையோ கோடிகளைக் கொட்டியழுதும் வெட்டியாய்ப் போயிற்றே! ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்பார்கள். இவளிடம் ஏற்கனவே போட்ட பணத்திற்குக் கணக்கு வழக்குமில்லையே! இனியும் பாலை சோலையாகுமென்று கனவு கண்டு என்ன பயன்?

மறுபடியும் நினைவூட்டுகிறோம். ஆங்கிலம் போன்றே இந்தியும் அன்னிய மொழிதான், தென்னவர்க்கு.

ஒன்றை ஆதரிப்பதுபோல் காட்டி, மற்றொன்றை மிகவும் உயர்த்திக் காட்டுகிறார். உள் கிடக்கை என்ன? “ஆங்கிலம் நல்லதுதான். ஆனால் இந்தியிலுள்ளதைப்போல அருமை பெருமைகள் அதற்குண்டோ?” என்றால் என்ன பொருள்? தேளைத் தூக்கித் தட்டிக் கொடுத்துப் பையில் போட்டுக்கொள்ளச் சொல்கிறார் என்பதைத் தவிர, வேறு என்ன பொருள்?

முதல் பாராவில் மறைத்துப் பேசியவர், அடுத்த பாராவிலேயே உண்மையுருவைக் காட்டிவிட்டார். “தேசத்தின் ஐக்கியத்துக்காக, ஆசிரியர்களுடையவும் மாணவர்களுடையவும் நலத்திற்காகப் பல்கலைக் கழகமட்டத்தில் இந்தியேபாடமொழியாக-பயிற்று மொழியாக இருக்க வேண்டும்!” என்று எழுதுகிறார்.

இவ்வளவு துணிச்சலாக எழுதிய பேனாவை நொறுக்கிப் போட்டால்தான் என்ன? அவர்கள் எண்ணம்தான் என்ன? ஆய்வுரை தந்திருக்கிறாரே, இப்படி; இதன் உட்பொருள்தான் என்ன?

இந்தியையே ஆட்சி மொழியாக்குவதற்குத்தான் இந்த அரிய ஆய்வுரையை இப்படிப் பொழிகிறார். பாடமெல்லாம் இந்தியிலேயே படித்த மாணவன் அரசின் அலுவலாளனானால், வேறு எந்த மொழியில் நிருவாகத்தை நடத்த முடியும்? இந்தியில் பயின்றவன் இந்தியில்தானே நடத்த முடியும்? தினையை வளர்த்தவன் தினையைத்தானே அறுக்க முடியும்? இந்தியில் படித்தவன் ஆங்கிலத்திலா நிருவாகிக்க முடியும்? இதன் மூலம் இவர்கள் ஆங்கிலத்தை மட்டும் அழிக்கவில்லை. தாய்மொழிக்குள்ள ஆட்சி உரிமையையும் தடுத்தழிக்கின்றனர். அதன் மூலம் வட்டார, மாநில ஆட்சிகள்கூட இந்தியிலேயே நடக்க வழி கோலுகின்றனர். இப்போதே “ஆங்கிலத்தில் பாடம் நடத்தும் கல்லூரிகளுக்கு, அரசினரின் மான்யங்களில்லை!” என்றறிக்கை விட்டுவிட்டார். தமிழின் மீதுள்ள காதலாலா? இல்லை! தமிழினத்தாரை ஏமாற்றி இந்தியைக் கொண்டு வரும் சூழ்ச்சிதான்! அமைச்சர் மறைத்ததைக் கோட்டீசுவரர் காட்டிவிட்டார்; வெளியிட்டுவிட்டார்.

“சரி; பல்கலைக் கழகத்தில் இந்தியால் பாடம் படிப்பதென்றால் எளிதா? இந்தி விரிவுரைகளைத் தமிழரென விளங்கிக் கொள்ளுதல் இயலுமா?” என்று கேட்டுவிடக் கூடுமே! அதனால் அதையும் அடுத்த வரியிலேயே சொல்லிவிட்டார், வஞ்சகத்தால் வாழ நினைப்பவர். “பள்ளிக்கூட நிலையிலேயே மாணவர்கள் இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கற்றுக்கொண்டுவிட்டால், பல்கலைக் கழக மட்டத்தில் இந்தி விரிவுரைகளைப் புரிந்துகொள்வது அவர்களுக்குத் துன்பமாயிராது!” என்றெழுதுகிறார்.

ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்குகின்றனர். ஒன்றை நீக்கி ஒன்றைப் பெறமுடியாது என்ற நிலையை உருவாக்கிவிட்டனர்.

இந்தி கற்றவர்களுக்குத்தான் ஆட்சியில் வேலைகள் கிடைக்கும் என்கின்றனர்!

அப்படியானால் பல்கலைக் கழகத்தில் இந்திதான் பாட மொழியாகிறது. இந்தியில்தான் விரிவுரைகள் நிகழும்!

இந்தி விரிவுரைகளைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், தொடக்கப் பள்ளிகளிலிருந்தே இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்கின்றனர்.

சூதுத் திட்டம் எப்படித் தொடக்கத்திலிருந்து வேர் விடுகிறது என்று காணுங்கள்!

தாய் மொழிகளும் பாட மொழிகளாய் இருக்கலாம் என்று வேறு சிலர் சொல்கின்றனர். ஆனால் தில்லிக் கொற்றத்தாரும் மாநில அடிமைகளும் வேறுபாடற்ற முறையில் மானியங்களை வழங்குவரா? தில்லிப் பல்கலைக் கழகம் இப்போதே இந்தியைப் பாட மொழியாக்கிவிட்டது, பயனை முந்தியடைய. பிற பல்கலைக் கழகங்களும், அரசினர் அலுவலை எதிர்பார்த்துப் படிக்கும் அத்தனை பேரையும் நிறைவுபடுத்துவதென்றால் இந்தியைத்தான் பாட மொழியாக்கித் தீர வேண்டும்!

“மாணவர்கள் தம் விருப்பம்போல் பாட மொழியைத் தேர்ந்துகொள்ளலாம், பெரும்பான்மை காட்டி!” என்ற கருத்தையும் கூறுகிறார். மாணவர்களா, தில்லியரசின் விருப்பப்படி பயின்றால்தானே கிடைக்கும். “மாணவர்கள் எந்த மொழியில் பயின்றாலும் பதவி தரக் காத்திருக்கிறோம்!” என்று தில்லியரசை அறிக்கை நீட்டச் சொல்லுங்கள், பார்க்கலாம்! வானம் இடிந்து விழுந்தாலும், கடல் வற்றித் தூர்ந்தாலும், தில்லியின் உள்ளம் மாறாதே!

★

ஆங்கிலத்தின் தவிர்க்கமுடியாத அவசியத்தைக் கட்டுரையாளர் கோட்டீசுவரரும் அறிந்திருக்கிறார். அதை அவரது கட்டுரையின் சில பகுதிகள் காட்டத்தான் செய்கின்றன. அவசியத்தை உணர்ந்திருந்தும், வெறியைத் தணித்துக்கொள்ள முடியவில்லை, அவரால். அதனால்தான் உள்ளத்தில் உள்ளது, எழுத்தில் வந்துவிட்டது.

இத்தனை கொடிய சாகச வலைகளை விரிக்கும் ஏடுகள், தென்னகத்தில் உலாவலாமா? ஆழக் குழிகளை வெட்டி வைத்துக்கொண்டு நம்மை ஆசை வார்த்தை காட்டி அழைக்கும் எத்தர்களின் எழுத்துக்கள், திராவிடத்திற்குள் நுழையலாமா? கொஞ்ச காலத்திற்காகிலும் அவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்! தயாராகட்டும் தமிழகம்! ★

கல்லூரி வாசலிலும் காங்கிரசார் மோசடி

வடசென்னையில் நடைபெற்றசினிமா விளம்பரக்கம்பெனிக் கூட்டத்தைப் பற்றிக் கடந்த கிழமை எழுதியிருந்தேனல்லவா! அதைக் கண்டு பிய்ந்துபோனதொன்று குரைத்திருக்கின்றது. செழியன் கண்டு எழுதியதெல்லாம் பொய் என்றிருக்கிறது.

அவர்களின் மடாதிபதி கல்லறைத் திடலில் பொய்யே விரித்தார் என்பதற்கு மற்றொரு சான்றையும் காட்டுகிறேன். கடந்த கிழமை இடமில்லாததால் அதைக் குறிக்க வியலாது போயிற்று.

ப. தமிழர் காமராசரைப் பற்றி அவரின் தகர முரசுக் கழகம் என்றும் ஒரே கருத்தைத்தான் சொல்லியதாம். ஆனல் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் இன்று போல் அன்றும் திட்டவில்லையாம். 'காமராசர் பதவிக்குவந்ததும் அண்ணுத்துரை சினிமாவில் கூடப் பாட்டுப் போட்டு வாழ்த்திணுரே! 'காமராசா! எங்கள் ராசா!' என்று அவர்கள் ஏற்றிப் போற்றிப் புகழ்ந்து பாராட்டினுரே! காமராசரைக் காக்காய் பிடிப்பதற்குத்தானே அந்தப் பாட்டைப் போட்டார்கள் தி மு. கழகத்தவர்கள்?" என்று சொன்னதுமட...

x x x

அது குறிப்பிட்ட பாட்டு எதுவென்று நண்பர்களுக்கு நினைவிருக்கலாம். சொர்க்கவாசலிலே, சிறைக் கோட்டத்திலே பாடப்படுகிறது அப்பாட்டு. கொடுங்கோலின் வடிவாயுள்ள மன்னன் சிறைக்கூடத்தைப் பார்க்க வருகையில் பாடப்படுகிறது அப்பாட்டு. அந்தப் பாட்டின் கருத்தென்ன? போக்கென்ன? "அர்த்த ராத்திரியில் குடை பிடிக்கின்ற முட்டாள் எங்கள் மன்னன்; பெண்களைக் கண்டால் விரட்டுகிற கழுகு எங்கள் மன்னன்; கொடுமையின் மொத்த வடிவம் எங்கள் மன்னன்!" என்று கதாநாயகனின் தங்கை கிண்டல் செய்து பாடுகிருள்... குறிப்பிட்டதுபோல, அப்பாட்டை எழுதியவர் அண்ணுவுமில்லை; அந்தப் பாட்டுக் காமராசர்மீது பாடப்பட்ட வாழ்த்துப் பாடலுமில்லை. எல்லோருக்கும் இந்த உண்மை தெரியும். என்ருலும் எல்லாரும் மறந்திருப்பர் என்றெண்ணிப் புளுகை விரித்து, பொய்யைப் பரப்பி "தி. மு. கழகத்து அண்ணுதுரை காமராசரை வாழ்த்திப் பாடல் எழுதி சினிமாவில் தந்தார்!" என்றது அந்த உருவம்.

முன் எழுதியவற்றைவிட, இது இன்னும் மிகத் தெளிவாகக் காட்டும் அந்தப் 'பேச்சாளரின் புளுகு மழைகளை இவற்றை எடுத்துக் காட்டியதற்காக என்னை நோக்கிக் குரைத்தென்ன பயன்?

நண்பர்களுக்கு மட்டும் ஒரு வேண்டுகோள். அந்த உருவத்தைப் "பேச்சாளர்" என்று எழுதிவிட்டது மாபெருங் குற்றம்தான். என்னை, அதற்காக மன்னியுங்கள்!

x x x

கல்லூரிகள் திறந்துவிட்டன. ஆனலும் பல்லாயிரம் மாணவர்களுக்கு அக்கல்லூரிகளின் வாயில்கள் திறப்பதுதான் பெருங் கடினமாயிருக்கிறது. அதிலும் திராவிட மாணவர்கள் சிலர், தாம் கல்லூரிகளில் சேருவதற்காகப் பட்டபாட்டை என்னிடம் அழாத குறையாகச் சொல்லினர். அவர்களது எதிர்காலம் இருண்டதாய்விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

வறுமை துளைக்கும் குடும்பத்தில் பிறந்துவிட்டதால் சில மாணவர்கள், கல்லூரிகளில் நுழையக்கூட முடியாமல் திண்டாடுகின்றனர். அவர்களிடம் திறன் உள்ள அளவுக்குப் பணமில்லையே! பணம் எதற்குத் தேவை என்று நான் சொல்ல வேண்டியதில்லை!

x x x

தோழர்கள் அண்மையில் செய்தித்தாள்களில் வந்த சில அறிக்கைகளைக் கண்டிருக்கக்கூடும். தக்கண மண்ணில் ஒரு மருத்துவக் கல்லூரியும் வடக்கே உள்ள மற்றெரு கல்லூரியும் அறிக்கைகள் வெளியிட்டிருந்தனஇப்படி: "எமது மருத்துவக் கல்லூரியில் இடம் வேண்டும் மாணவர்கள், கட்டட நிதிக்கென ரூ 5000 நன்கொடை தந்தால் இடம் உறுதியாய்க் கிடைக்கும்!"

எத்தனை மாணவர்கள் 5000 ரூபாயை மூட்டை கட்டி வைத்துக் கொண்டிருக்கின்றனர்?

ஏழை மாணவர்கள் இதயக் கனவுகளெல்லாம் நொறுங்கி அழியவேண்டியதுதானு? கட்டட நிதி வேண்டுமென்ருல் மாநில அரசினரையும் மத்திய அரசினரையும் வற்புறுத்திப் பெறுவதற்கென்ன?

x x x

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பொறியியல் கல்லூரி ஒன்றில் இடம் பிடிக்க முயன்ற மாணவன் 5000 ரூபாய் கொடுத்திருக்கிருன். "கல்லூரிக் கட்டட நிதிக்கா?" என்று கேட்டுவிடாதீர்கள். கல்லூரி நிதிக்கு என்று தந்திருந்தால்கூடப் பரவாயில்லை. கதர்ச்சொக்காய்காரன் ஒருவனின் கைக்குச் சென்றிருக்கிறது, அந்தப் பணம். பொறியியல் கல்லூரியில் இடம் கிடைக்காது திண்டாடினுன் அந்த மாணவன். மாணவனின் பெற்ருேரை அணுகி "நான் வாங்கித் தருகிறேன். ரூ. 5000 தாருங்கள் எனக்கு!" என்ருனும். சொன்னவன் நடைபாதைக் காரனுயிருந்தால் அவர்கள் நம்பப் போவதில்லை. "முடித்துவிடுவேன்!" என்று சொன்ன குரல் எம். எல். ஏயின் குரலாயிருந்ததால் நம்பினர். பணத்தையும் தந்துவிட்டனர். பின்னராகிலும் மாணவனுக்கு இடம்கிடைத்ததா என்ருல், அதுதான் இல்லை. பொறியியல் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பட்டியல் வெளிவந்துவிட்டது.துளைத்துத் துளைத்துத் தேடியும் அம்மாணவனின் பெயரைக் காணவில்லை. பணத்தைப் பெற்றுச் சென்ற எம். எல். ஏயையும் திரும்பக் காணவில்லை; போன பணமும் திரும்பவில்லை.

இந்த நிகழ்ச்சியை மாநில அமைச்சரவையில் உள்ள ஒருவரிடம் அம்மாணவனின் பெற்ருேர்கள் புகார் செய்திருக்கின்றனர். என்ருலும் பயனில்லை. "ஆகட்டும் பார்க்கலாம்!" என்று சொன்ன அமைச்சர், இதுவரை அந்தப் பகல் கொள்ளைக்காரரைக் கூப்பிட்டுக் கண்டிக்கவுமில்லையாம். இந்தச் செய்தியை ஓர் ஆங்கில ஏடு வெளியிட்டிருக்கிறது.

x x x

முன்னர் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பொறுக்குக் குழுவில் பணியாற்றிய ஒரு பெரிய மனிதர் பதவி விலகிய கதையையும் நாம் அறிவோம். அந்த முடிவு இந்தக் காங்கிரசு எம். எல். ஏக்கும் ஏற்பட்டால்தான், துன்பப்பட்ட மாணவன்உள்ளம் அமைதியுறும். அந்த எம். எல். ஏ, பதவியிலிருந்து தானே விலக மறுத்தால், உடனே விலக்குவது அமைச்சர் கடன். செய்வாரா அமைச்சர்?

x x x

அண்ணுமலைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளின் அனுமதிகளிலும் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள் தலையிடப் போவதாகக் கேள்விப்படுகிறேன். இப்போது எச்சரிக்கையோடில்லாவிடின், பின்னர் சிந்தாமண் தேசுமுக்குக்கு இன்னும் பலபல வழக்குகள் கிடைத்துவிடும். பச்சைத் தமிழர், வெள்ளம் மேலும் பெருகும் அணை போடுவாரா?

—மா. முத்துராமலிங்கம்.

முகவரி மாற்றம்

வே. சௌந்தரராசன்
பீ. ஏ. பீ. எல்.
2, பனகல் இரண்டாவது தெரு,
மதுரை-2.

வராத விளம்பரம்

இது
அரசாங்கம்
நமக்குத் தராத விளம்பரம்!

(நாட்டிலே மக்கள் அன்ருட வாழ்வுக்கும் திண்டாடுகின்றனர். ஒரு வேளைச் சோற்றுக்கும் வழியற்றுத் திண்டாடுகின்றனர். கோடி கோடி மக்கள். அவர்கள் நாள்தோறும், நாழிகை தோறும் வீதிவீதியாய் அலைகின்றனர், ஓடேந்தி. அந்த ஏழை மக்கள் கூட்டத்தைப் பார்த்து அமைச்சர்கள் சொல்கின்றனர் "போடுங்கள்! போடுங்கள்! பரிசுப் பத்திரத்தில் பணம் போடுங்கள்!" என்று. பணம் போடுங்கள் என்று வந்த அந்தக் கோமாளிகளிடம், ஏழை மக்கள் கேட்பது என்ன என்பதை விளம்பரம் தந்த அவர்கள் காட்டவில்லை. ஆனல் நம் ஓவியர் காட்டுகிருர்)

போர்க்குழுவின் கருத்துரைகள்:

சென்னையின் கிசி ஆகாதீர்!

எங்களுக்கு ஏன்?

"மூன்றாவது முறையாக நாம் நமது தமிழ்மொழியைக் காக்கப் போராட வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்தியை எதிர்ப்பது என்பது இன்றையத்தினம் நமது முக்கிய பிரச்னைகளில் ஒன்றாக இருக்கிறது!

இன்றையத்தினம் எங்கே பார்த்தாலும் இந்தி! 'அஞ்சல் அட்டையில் இந்தியில் எழுதுகிறாயா - எழுது; மைல் கற்களில் எழுதுகிறாயா-எழுது; அது போதாது என்றால், எங்கள் நெற்றியிலும் எழுது!' என்கிறார்கள் அமைச்சர்கள்.

இந்தி - இலக்கியத்தில் சிறந்த மொழியா? இலக்கணத்தில் சிறந்த மொழியா? காவியத்தில் சிறந்த மொழியா? பின் ஏன், இந்திமொழி இங்கு?

ஆகஸ்டு 30-ம் நாளுக்குள் குடியரசுத் தலைவர் இந்தி பற்றிய உத்தரவைத் திரும்பப் பெறாவிட்டால், பிறகு இந்தி எதிர்ப்பைக் காட்டப் போர் துவக்கப்படும் என்கின்ற அறிவிப்பை குமாரபாளையத்தில் கூடிய பொதுக்குழு முடிவெடுத்து, தந்துள்ளது.

மாயமான்!

கம்பர் தீட்டிய இராமாயணத்திலே தான் மான் வருகிறது-சீதை மயங்குகின்றாள்! வந்த மான், மாரீசன் என்ற மாயமான்! அதேபோல், இந்தி என்ற மாயமான் தமிழை அழிக்க வருகின்றது!

தயாராகட்டும் சிறைச்சாலைகள்!

இந்தப் போராட்டத்தில் ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் சிறைசெல்ல நேரிடும். 'எங்களை அடைப்பதற்கு இந்த நாட்டிலே சிறையில்லை; எங்களை அடைக்கச் சிறைச்சாலை போதாது. என்வே, இங்கே உள்ள பள்ளிக்கூடங்களையெல்லாம், கோவில்களையெல்லாம் சிறைச்சாலைகளாக மாற்றுங்கள்-அதற்காக ஒரு மாதம் தவணை தருகிறோம்; அதற்குள்ளாகச் சிறைச்சாலைகளை விரிவுபடுத்துங்கள்' என்று ஆட்சியாளர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

எங்களைச் சிறையில் அடைத்து விட்டு அமைச்சர்கள் வெளியே வரவா முடியும்? இந்தி எதிர்ப்பில் எங்களை அடைத்துவிட்டு இவர்கள் வெளியே கிளம்ப முடியாது!

காமராசர் நிலை?

சப்பான் நாட்டிற்கு அமெரிக்கத் தலைவர் வருவதாக இருந்தார்; என்ன ஆயிற்று?-அவர் வரமுடியாத நிலை உருவாயிற்று!

காமராசருக்கு நான் சொல்லுகின்றேன்-இந்த இந்தி எதிர்ப்பில்எங்களை நீங்கள் அடக்குமுறைக்கு ஆளாக்கினால், சப்பான் நாட்டு அமைச்சர் கிசியைப் போன்ற கதி உங்களுக்கும் வரும் என்று எச்சரிக்கின்றேன்.

இந்தப் போராட்டத்திற்கு தி. மு. க தோழர்களும் மொழி வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர்களும், பெரியோர்களும் தாய்மார்களும் ஆதரவு அளித்துச் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

—கலைஞர் மு. கருணாநிதி
எம். எல். ஏ.

திருத்தம்

இவ்விதழ் 9-ம் பக்கத்தில் "காங்கிரசு எம். எல். ஏ." என்று வரும் இடங்களிலெல்லாம் "ஒரு எம். எல். ஏ." என்று திருத்திக் கொள்க. தவறுக்கு வருந்துகிறோம்.

ஏஜண்டுகள் தேவை

ரத்னு சுகபேதி அல்வா
[FRUIT-LAX]

பெரியோர்கள் முதல் குழந்தைகள்வரை சாப்பிடக்கூடியது (இனிப்புள்ளது)

மாதிரி சாம்பிள் இலவசம்
விபரத்துக்கு
சம்பு இன்டஸ்ரீஸ், சேலம்-2.

இது தத்துவம்!

[25-6-60-ம் நாளிட்ட "தென்ற"லில் வெளியான "தத்துவம் என்றால் என்ன?" என்ற கட்டுரைக் கருத்துக்கள் குறித்துத் தோழர்கள் பலர் ஒட்டியும் வெட்டியும் எழுதியுள்ளனர். இந்த இதழில் அவற்றை வெளியிடலாம் என்றெண்ணியிருந்தும், போதிய இடமில்லை. எனவே, ஒன்றினை மட்டும் சுருக்கித் தந்திருக்கிறோம். தோழர்கள் அனைவரும் மேற்கொண்ட விவாத முறை அழகியதாய்இருந்தது. ஆ-ர்.]

"தத்துவம் எல்லோரும் ஒப்புக்கொள்ளும் ஒரு பொருளிலேதான் அடங்கிக்கிடக்கிறதென்பதை நாம் நம்பவில்லை. வாழ்வின் இலக்கணமே தத்துவம். அது இடத்தாலும் காலத்தாலும் மாறுபடுகிறது. வாழ்க்கைத் தேவைகளையடைய வழிகாட்டுகின்ற தத்துவம் விரிந்து பரவுகின்றது; அல்லாத வரட்டுத் தத்துவம் மங்கி மறைகின்றது. ஒரே உலகில் பல்வேறு சமயங்களும் பல்வேறு தத்துவங்களை வைத்துக் கொண்டிருக்கின்றனவே? ஏன்? கட்டுரையாசிரியரின் கருத்துப்படி ஒரே பொருளிலேதான் தத்துவம் அடங்கிக் கிடக்கிறதென்றால் பல தத்துவங்கள் தோன்ற வேண்டியதில்லையல்லவா? இல்லாத பொருள் தத்துவமென்றும் அனுபவத்திற்கு வரும் தத்துவமென்றும் பாகுபடுத்துவது பகுத்தறிவிற்கப்பாற்பட்ட கருத்து. தத்துவங்கள் பல்வேறு உருவங்களிலே இருந்தாலும் கடவுள் உண்டென்று கொள்கின்ற தத்துவம் ஒரு பிரிவாகவும் கடவுள் இல்லையென்கின்ற தத்துவம் ஒரு பிரிவாகவும் இரண்டாகப் பிரிக்கப்படும். இதுவே எனது முடிவான கருத்து.

—டி. ஆர். சுவாமி, கோவை 11.



பரணிப் பேச்சு —கண்ணதாசன் விளக்கம்

''நேற்று மூன் தினம் பரணியில் நடைபெற்ற விருந்தில் நான் பேசிய தாகச் சம்பந்தமற்ற முறையில் பல ஏடுகளில் செய்திகள் வெளி வந்துள் ளன; ஒவ்வொரு ஏடும் வெவ்வேறு விதமாகத் திரித்துப் பிரசுரித்துள்ளன.

'கோட்டைக்குள் குத்து வெட்டு' நடக்காதா என்று 'இரை எடுக்கும்' ஏடு ஒன்று வேண்டுமென்றே விசமம் செய்திருக்கிறது. இந்தத் தலைப்பி லிருந்தே செய்தி பிரசுரிக்கப்பட்ட தன்மையையும், திரிக்கப்பட்ட காரணத் தையும் அறிந்துகொள்ளலாம். நிற்க,

பரிசு பெற்ற கலைஞர்களுக்காகவே மேற்படி விருந்து நடைபெற்றது. பரிசு பெற்ற நடிகர்கள் பலர் வர வில்லை; அவர்களைப்பற்றித்தான் அனை வ ம பேசினுர்கள். அந்தச் சபையின் அந்தத் தோரணைக்கு ஏற்ப, வராத நடிகர்களின் 'முதலாளித்துவம்'பற்றி யான் பேசினேன். பரிசு பெற்றவர் களில் எம். ஜி. ஆர். இல்லை; ஆகவே, எவ்விதத்திலும் அந்த இடமோ, நானே எம். ஜி ஆர். அவர்களைப்பற்றிப் பேசக்கூடிய சூழ்நிலையில் இல்லை. கோபமாக அங்கு சொல்லப்பட்ட குறைகள் அனைத்தையும் பிரசுரிக்கா மல் எம். ஜி. ஆர். அவர்களைக் குறிப் பதுபோல் கற்பனை செய்துகொள்ளக் கூடிய விதத்தில் நெறி கெட்ட முறை யில் செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

'நடிகர்கள்' என்றே குறிப்பிட்டேனே தவிர, 'அவர்' என்று யாரையும் ஒரு முறையும் குறிப்பிடவில்லை. பல நடிகர் களும் தங்களைத்தான் என எண்ணிக் கொண்டிருக்க, பத்திரிகை ஒன்று மட்டும் கோட்டைக்குள் வருவானேன்? எதிர்பார்க்கிருர்கள்-'ஏதாவது நடக் காதா?'-என்று! எந்த நாளிலும் அதற்கு இடமளிக்கும் வரையில் நான் நடந்ததில்லை-நடக்கமாட்டேன்.

இந்தி எதிர்ப்பு நெருங்கிக்கொண்டி ருக்கும் நேரத்தில், இதுபோன்ற குறும்புத்தனங்கள் எதிர்பார்க்கப்படு பவைதான்; ஆனுல், என்னை நன்ருக அறிந்துள்ள இயக்கத் தோழர்கள் இதை விவாதித்து, நேரத்தை வீணுக்க வேண்டாம்.

இந்த நேரத்தில் வெளியிடப்படும் சில 'உறவுச் செய்திகள்' அனைத்தும் கற்பனையே! என்னுடைய சுயமரி யாதை, இயக்கத்தின் மானம்; இவற்றை நான் எப்போதும் காப் பேன்.

தொழிலிலும், இயக்கத்திலும் எம். ஜி. ஆர். அவர்களுக்கும் எனக் கும் பல பிணைப்புகள் உள்ளன; எதையும் நேரில் பேசிக்கொள்ளக் கூடிய சூழ்நிலையை இன்னும் யாரும் இழந்துவிடவில்லை.

மற்றப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்தியையும், ஒரு பத்திரிகை பிரசுரித்துள்ள முறையையும்ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும்.''

ஈ. வே. கி. சம்பத்

அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வருகிற

''சண்டே டைம்ஸ்''

வாசித்தீர்களா?

தனியிதழ் 15 காசு

ஆண்டுச் சந்தா ரு 8-50.

ஆறு மாதச் சந்தா ரு. 4-50.

திருமண அழைப்பு.

பேரன்புடையீர்!

நான் வளையாம்பட்டு உயர்திரு, க. இராமசாமி அவர்களின் மகள் **சகுந்தலாவை** வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் மணவிழா 10 7-60 ஞாயிறன்று காலை திருவண்ணுமலை வட்டம் கருங்காலி குப்பத்தில் நடைபெறும். அனைவரும் வருகைதர வேண்டுகிறேன்.

நன்றியுள்ள,

அ. கோவிந்தன்,

ஆசிரியன், கீழ்பென்னுத்தூர்.

எங்கும் விற்பனையாகிறது 13-வது இதழ்

தமிழர்நாடு

(கிழமை ஏடு)

ஆசிரியர்:

நா. வா. கலைமணி

விவரங்களுக்கு:

தமிழர் நாடு

1/19 ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு,

சென்னை-7.

அடுத்த இதழில் தொடங்குகிறது வெண்பாப் போட்டி!

ஈற்றடி : **எச்சரிக்கை காணீர் இது!**

எழுதி அனுப்புங்கள்! இறுதி நாள் 23-7-'60



இன்னும் ஒரு சோசப் இவ்வுலகில் இருக்கின்றான்! இதயம் நொந்தந்தோ கண்ணீரும் வடிக்கின்றான்!

ஆராய்ச்சிக் கூடத்திலிருந்த சோசப். சாவை அணைத்துக்கொண்ட சோகச் செய்தி இன்னும் நெஞ்சை விட்டகலவில்லை! வெளிநாட்டில் அவன் பெருக்கிக் கொண்டுவந்த அறிவைக் கண்டு வியந்து மகிழ்ந்த அவன் மனைவி, அதே கண்களால் அவன் பிணத்தைக் கண்டு அழுத காட்சி கண்ணை விட்டகலவில்லை! அதற்குள் மற்றொரு சோசப் தயாராகிக்கொண்டிருக்கிறான். அவன் தன் புதை குழியைத் தயாரித்துக் கொள்வதற்கு அடுக்கடுக்காகத் துன்பச் செங்கற்களை அள்ளித் தருகிறது, பண்டிதரின் ஆட்சி!

வாழத் துடிக்கின்றவர்களை எல்லாம், நெஞ்சு துடிக்கக் கொன்றிடும் கல்மனத்துக் காங்கிரசார் ஆட்சியில், அவன் திரிகிறான். இளைய நெஞ்சத்து ஆசைகளையெல்லாம் இடித்துத் தூளாக்கும் அரசாங்கத்தின் பிடியிலேதான் அவன் வதைகிறான். அவன் வடக்கத்தியானானாலும், காங்கிரசரசாங்கத்திற்குப் பலியாகின்றான் என்பதால் நாம் இந்த விவரங்களைத் தருகிறோம். சிந்தையுள்ளார், செங்குருதி சிந்தும் தொழிலாளர்மீது அன்புள்ளார் எல்லாரும் கேட்பீராக!

போபாலில் அவன் வாழ்கின்றான். பெயர் ஓ. பி. பெல். 1957 டிசம்பரில் அவன் பதவியில் சேர்ந்தான். அவனைச் சேர்த்துக்கொண்டபோது விதிக்கப்பட்ட ஒரே நிபந்தனை. வெளிநாட்டுப் பயிற்சிக்கு அவன் சென்றால் அதற்காகும் செலவுகளைத் தனது அலுவலகத்திலிருந்து பெறுவதற்காக ஒரு பத்திரம் மட்டும் எழுதிக்கொடுக்க வேண்டும் என்பதே! அப்படியே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்துவிட்டு வேலையில் சேர்ந்தான். அவன் வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சி முடிந்து வந்ததும், விரும்பினால் அந்த எச். இ. லிமிட்டெட்டிலேயே வேலை பார்க்கலாம்; வேறு இடத்தில் சேர்ந்து பணியாற்றினால், பயிற்சிக்கெனப் பெற்ற தொகையை மட்டும் திரும்பத் தந்துவிட வேண்டும். இப்படித்தான் நிபந்தனை முதலில். ஆனால் அவன் வேலையில் சேர்ந்த இரண்டே திங்களில், ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடச் சொல்லினர். அந்தப் புதிய ஒப்பந்த விதிப்படி வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சிபெற்றுத் திரும்பி வந்தாலும், மறுபடியும் அவர்களிடமே மூன்றாண்டுகள் கட்டாயம் பணிபுரிய வேண்டுமென்று இருந்தது. வேலையில் சேரும்போது சொல்லாது, புதிதாய்க் கிளப்பிய இந்த விதியை ஏற்றுக்கொள்ள மறுத்தான் பெல். மோசடிக்காரர்களின் வெறி விளையாட்டுக்குப் பணிந்துபோக, உரிமை விளையாடும் அவன் நெஞ்சம் ஒப்பவில்லை. வந்தது வரட்டும் என்று எதிர்த்து நின்றான்! ''ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம்! உன்னை ஒழித்துக் கட்டிவிடுவோம்!'' என்றனர் மேலதிகாரிகள். அப்போதும் அவன் பணியவில்லை. அதட்டிப் பேசியும் அவன் அடங்கிடவில்லை என்றதும், தொல்லைகளைத் தொடுத்தனர், ஒன்றன்பின் ஒன்றாய். ஏதாகிலும் குற்றம் சாட்டி எப்படியாலும் அவனை வெளியேற்றிவிட வேண்டும் என்று துடியாய்த் துடித்தனர். அவன் தொழிலாளர் செயற்குழுவுக்கு 1959-ல் தேர்ந்தெடுக்கப்பட்டது அவர்களுக்கு ஒரு வாய்ப்பாய் அமைந்துவிட்டது. அவன் அந்தச் செயற்குழுப்பதவி மூலம் அறிந்துகொண்ட சோகக்கதைகள் பலவாம். மத்திய அரசினர் விடுத்த கட்டளைகளுக்கு ஏற்ப, அவன் சார்ந்த தொழிற்சங்கத்தின் விதிமுறைகளையும் மாற்றியிருக்கின்றனர், மேலதிகாரிகள். அந்தத் தீச்செயல், செயற்குழுவின் நடவடிக்கை ஏடுகளை நாசம் செய்வது வரைக்கும் சென்றிருக்கிறது. அதன்மூலம் அவர்கள், தொழிலாளர்கள் அக்குழுவில் அங்கம் வகிப்பதையும் தடை செய்யும் அளவுக்குச் சென்றிருக்கின்றனர். அதை மறுக்கவும், அவர்கள் ஆணவத்தை நொறுக்கவும், பெல் உட்பட அலுவலர் செயற்குழுவினர் பதின்மூவர் பதவி விலகியிருக்கின்றனர். அப்போதும் மேலே உள்ளவர்களின் ஆணவம் அடங்கவில்லை.

தொழிலாளர்களுக்கென தனித் தொழிற் சங்கம் அமைத்துக்கொள்ள உரிமை உண்டு. அதன்படி உள்ள உரிமையைக் கேட்டான். நீண்ட நாள் கடிதத் தொடர்புகள் நடந்தும், இறுதியில் பழி வாங்குதலே தலை தூக்கி நிற்கிறது. இதற்கிடையே, அவனது சம்பளமான ரு 300-ல் வாடகைக்காக ரு 176 மாதந்தோறும் பிடிப்பதென்று தீர்மானித்துச் செயல்பட்டுவிட்டனர், மேலதிகாரிகள். ஊதியத்தைக் குறைத்து அவன் அடங்கிவிடுவான் என்றெண்ணியிருக்குன்றனர். அதுவும் நடக்கவில்லை இழிசெயல் எதுவாலும் அவனைச் சாய்க்க முடியவில்லை; அவன் குன்றென நிமிர்ந்து நின்றான்.

''ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம்!'' என்று அவர்கள்பயமுறுத்திக் கொண்டிருந்தபோதே அவன் வேறு வேலைக்குப் போய்விடலாம் என்றுகூட முனைந்தான். தேசியச் சிறு தொழில் கழகத்தில் வேலை காலியிருப்பது அறிந்து, அதற்கு மனுச் செய்தான். அவர்கள் சட்டப்படி, அவர்களிடம் வேலைக்கு இருப்போர் வேறு வேலைக்குச் செல்வதென்றால், அவர்கள் மூலமாகவே தம்மனுவை அனுப்ப வேண்டும். சட்டத்தின் போக்கு இப்படி என்றாலும், மேலதிகாரிகள் தன் மனுவை அனுப்பி வைக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்து, அதைத் தானே நேரடியாக அனுப்பினான். அத்தோடு தான் ஏற்கனவே எச். இ. எல்லில் வேலை பார்த்து வருவதையும் அம்மனுவில் துணிவோடு தெரிவித்தான். புதிய முயற்சியிலும் இடி.

ஆம்! அவன் அந்த வேலையில் புகுந்த நாள் முதலாய் நெடுக இடிகள் விழுந்தன. வேலையில் சேர்ந்த இரண்டாவது மாதத்தில் புதிய நிபந்தனைகளை விதித்தனர். அடுத்து, தொழிற் சங்க உரிமைகளைப் பறித்தனர். பின்னர் சம்பளத்தில் பிடித்தம் செய்தனர். எச். இ. எல்லிலிருந்து விலகி வேறு வேலைக்குச் செல்லலாமென்றால் அதற்கும் தடையிட்டனர்!

இன்னுமொரு சோசப் இந்த மண்ணில் தோன்றத்தான் வேண்டுமா? அப்படியானால் அழிந் தொழியட்டும்; அழிந்தொழியட்டும்; அழிந்தொழியட்டும், இந்த வீணர் ஆட்சி!

தமிழைக் காப்போம்

(கும்மி)

சிந்தையோடு வந்த சொந்தமே மிகுந்த
செந்தமிழ் மொழியைத் தள்ளவோ--வந்த
இந்தியாம் அதனைக் கொள்ளவோ!--பெற்ற

தந்தை தாயகத்தைச் சந்தை ஆக்குவோரை
மைந்தரென்று நாமும் சொல்லவோ--சொல்ல
எந்தநாவும் நாணும் அல்லவோ!

வாழும் தமிழ்மொழியின் சூழும் புகழ்மறைத்து
வாழ்வதென்பதவர் திட்டமே--யார்
ஆள்வதென்பதிந்தக் கட்டமே?--அந்த
நாளில்திரும்பி இந்த நாளில் விரும்பிவந்து
பாழும்'இந்தி' கொடியும் கட்டுதே--பார்!
சூழத் தமிழ்க்குருதி கொட்டுதே!

விழிக்குநிகர்எனும்நம் மொழிக்குநேரும் இழிவை
விழித்துக் கனல்தெறிக்கப் பாருங்கள்--கொடும்
பழிக்குப்பழி எனமுன் வாருங்கள்--வாழ்வு

அளித்த தமிழ்இனத்தை அழிக்கும் இந்திநினைப்பை
அழிக்கச் சபதம் ஒன்று கூறுங்கள்--தமிழ்
செழிக்கத் தமதுயிரும் தாருங்கள்!

அன்னை மடியிருந்து சொன்ன மொழிமறந்தே
என்ன மொழிதனையும் ஏற்பதோ--விந்தை!
உன்இமை என்கண்ணைக் காப்பதோ--அன்று

மன்னர் முடியிருந்து மண்ணில் நடைபயின்ற
வண்ணத்தமிழை 'இந்தி' தீய்ப்பதோ--இதற்(கு)
உண்மைத்தமிழர் செவி சாய்ப்பதோ?

—சுப்பு ஆறுமுகம்

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

தெரிகிறது. அவன் மலைசாதியைச் சேர்ந்தவன். அவன் கையிலும் கத்தி இருக்கிறது. ஏதோ கத்திக்கொண்டு வேகமாக ஓடிவருகிறான். நானும் ஓடினேன், இரைச்சலிடாமல். மலையாள் ஓடிவருவதைக்கண்ட கட்டாரி பக்கத்தில் கிடந்த கம்பை எடுத்துக்கொண்டு தயாராய் நின்றான. அவனும் தயாராய்விட்டான். ஆனால் நான் வருவதைக் கவனிக்கவில்லை. போதையுண்ட அராபிக்குதிரையென ஓடிவந்த மலையாள், கட்டாரியை நெருங்கிவிட்டான். ஐயோ, நான் நெருங்குவதற்குள் அவன் நெருங்கி விட்டால்...கட்டாரியை நெருங்கி விட்ட மலையாள் திடீரெனக் குனிந்தான். கட்டாரி அவனைத் தாக்குவதற்குத் தன் தடியைப் பயன்படுத்தினான் விரைந்துவந்த தடியைத் தடுக்கத்தான் மலையாள் திடீரெனக் கீழே குனிந்தான். கட்டாரியின் குறி தவறிவிட்டது. அவன் கம்பு எங்கோ போய்விட்டது! நிலைகுலைந்த கட்டாரியின் கழுத்து, அவன் பிடியில் அகப்பட்டுக்கொண்டது. கட்டாரி தன் வாழ்நாளிலேயே கண்டிராததோல்வி தான் அது. கட்டாரி போட்ட கதறலில் என் காதே செவிடானது நடப்பது அறியாது மயங்கி நின்றேன்.

இரத்தம் ஒழுகும் கத்தியைத் துடைக்காமல்கூட என் அருகில் வந்த மலையாள் சொன்னான்: ''எப்படியோ வெறியன் செத்தானுங்க! அவன் மட்டும் இன்னும் ஒரு நாள் உயிரோடிருந்தா உங்க ஊரையே பொசுக்கியிருப்பானுங்க. அவனோடு பழகிய ஒரே ஆளும், அவனை நம்பிய ஒரே ஏமாளியும் நான்தானுங்க! இவன் செஞ்சதுக்கெல்லாம் என் மேலே பழி விழுந்திட்டதுங்க. தாராபுரம் கொள்ளையில் இவனோடு போனேன். தான் தப்பிக்க என்னைக் காட்டிக் கொடுத்திட்டானுங்க...இம் ...எப்படியோ செத்துட்டானுங்க. நீங்க உங்க காட்டெல்லையிலே நடந்ததாலே......சட்டப்படி செய்யுங்க!''

நானும் சொன்னேன்: ''ஆமாம்! எப்படியோதான் செத்துவிட்டான்! எப்படியோதான் செத்துவிட்டான்! என் கையில் சாகவேண்டிய வெறியன், எப்படியோதான் செத்துவிட்டான்!''

என் நெஞ்சத்தின் வெறி மட்டும் அடங்கவில்லை! இன்னும் அடங்கவில்லை!

—மா. பாண்டியன்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.

தொலைபேசி எண் 83710